

# சிரித்திரன்

அகிலாங்கன் 40

# நவீன அமுதசுரபி





மேல்நாட்டவன் டெலிவிஷன்; ஏவுகணை எல்லாம் எங்களைப்பார்த்துத்தான் கண்டுபிடித்தது.

எப்படி ? ? ?....

அஞ்சனம் கண்டு டெலிவிஷன் செய்தான்.... சூனியம் கண்டு ஏவுகணை செய்தான்.

—ஜோக்கிரட்டீஸ்

அட்டைப் பட கருத்தோவியத்திற்கு சிறந்த கவிதை எழுதி அனுப்புபவருக்கு ரூபா 25/- பரிசு வழங்கப்படும்

விலை ரூபா 2-50

பெப்ரவரி 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If you have decided upon a Travel

Please Dial 01 223 6032

Jana Enterprises will make your Journey a Joy For Ever.

For your Business in London also. Contact

**Jana Enterprises Ltd**

பிரயாணம் செய்யப் போகிறீர்களா? சௌந்தர்யமான சௌகர்யமான சூழ்நிலையில் உங்கள் பிரயாணத்திற்கு, சகல ஒழுங்குகளும் செய்து தருபவர்கள்,

**ஜனா என்டர்பிறைசெஸ் லிமிட்டட்**

இங்கிலாந்தில் வர்த்தகம் செய்யவும் தொடர்பு கொள்ளுங்கள்!

# JANA ENTERPRISES LTD

TRAVEL & COMMISSION AGENTS

38, WROUGHTON ROAD,
LONDON S. W 11-6 B. G.
U. K.


T'Phone: 01 223 6032

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

நகை 22 சுவை 2 பெப்ரவரி 1984

## கல்வியும் நாமும்




"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று கூறி கல்விக்குக் கடவுளின் ஸ்தானம் கொடுத்தவன் தமிழன். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று கூறி அறிவை ஆராதனை பண்ணினவன் தமிழன்.

இந்த கல்வியென்னும் அத்திவாரத்தில் உயர்ந்த கோபுரங்கள் தான் தமிழ் இனம் பெருமைப் படும் ஐம்பெரும் காப்பியங்கள். மேல்நாட்டவர்களுக்கு இரண்டே இரண்டு காப்பியங்கள்தான் உள.

போப் என்ற ஆங்கில அறிஞன் எமது இலக்கியத்தை தனது உயிருக்கு மேலாக உபாசித்தபடியாலன்றே தனது கல்லறையில் "Here lies a student of Tamil இங்கு ஒரு தமிழ் மாணவன் உறங்குகின்ருன்" என்ற வாசகத்தை பொறிக்கும்படி கூறி மறைந்தார்.

இப்படியான தமிழ் கல்வியின் அந்தஸ்திற்குத்தான் என்ன நேர்ந்தது. அந்நிய இனத்தவரின் ஆட்சி, அந்நிய மொழியாட்சி எல்லாம் எம்மை நீண்ட காலம் முடக்கு வாதத்தால் வாழாமல் வைத்துவிட்டது. சுதந்திரம் பெற்ருேம். கட்சிகள் மாறி மாறி ஆட்சிபீடமேறுவதால் கல்வித் திட்டங்களும் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கின்றன.

வைத்தியர்கள் அடிக்கடி மாறி, மருந்துகளை மாற்றி மாற்றி கொடுத்தால் நோயாளியின் நிலை அனுதாபத்திற்கு உரியது.

அடுத்ததாக எமது அனுபவம் மிக்க ஆசிரியர்கள் எல்லோரும் கனத்த பணப்பை தேடி கானு, நைஜீரியா போன்ற நாடுகளுக்குப் பறந்துவிட்டார்கள். ரியூட்டரியால்தான் பெறுபேறு பெறலாமென மாணவர்களெல்லாம் அங்கு படையெடுக்கின்ருர்கள்:

இந்தச் சூழ்நிலையில் ரூபவாஹினியென்ற மோகினிப் பேயும் மாணவர்களைக் கல்வியிலிருந்து கவர தனது சாஹசங்களைப் புரிகின்றது.

இலவசக் கல்வி என்பது பெயரில் மட்டும் தான். புத்தகம் கொப்பிகளின் விலை தலை கிறுகிறுக்கச் செய்கின்றது. கல்வி என்பது இன்று பெற்ருேரின் பணத்தை ஏப்பமிடும் திமிங்கிலம். மேல்நாடு தனது கல்வியால் சந்திரனில் காலடியைப் பதித்து விட்டது. இன்று செவ்வாய்க் கிரகத்தை எட்டிப் பிடிப்பதில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எமக்குப் பிரச்சனைகள் சிலை வைத்துக்கொண்டிருக்கின்றன. வட்ட மேசை மகா நாடு இனப்பிரச்சினையை சத்திர சிகிச்சை செய்ய மகாநாடு நடாத்திக்கொண்டிருக்கின்றது.

எமது பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு நாம் கல்வியில் முன்னேற்றங் காணுவிடில், நாம் அதிவிவேக பூரணகுருவும் சீடருமாய் உலகின் சிரிப்புக்கு ஆளாகுவோம்.

---

● சனி பார்வை... அதுதான் மகன் பெயில் விட்டவன்;

□ இல்லை வீடியோ பார்வை... அதுதான் காரணம்.

— அதிமதுரம்



□ என்ன பத்திரிகையில் செய்தி

● உயிர்காப்புச் சங்கம் நீச்சல் போட்டி நடத்தப்போகுதாம்;

□ இப்போ யாழ்ப்பாணத்தில் எல்லாரும் நீச்சல் வீரர்கள் தான்... வீதியில் நல்ல நீச்சல் பயிற்சி பெற்றிருக்கிருர்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஹிம்சா தர்மம்

**சந்திரபோஸ்**

நீ மருணித்து விட்டாயாம்
நம்பவே முடியவில்லை!
இந்த மனிதனின்
சமாதானத்திற்காக
நீ - சமாதியானாய்!
ஓ .. இந்த உலகமோ
சமாதானத்தை
சமாதியாக்கிக்கொண்டிருக்கிறது!
உலகம் உருப்பட
உன்னுடல் உருக்கினாய்
அணுயுத்த அச்சத்தில்,
உலகம் உருகிக்கொண்டிருக்கிறது!
நீ - சிந்திய இரத்தங்களில்
இந்த மனிதனின்
இதயங்கள் ஈரமாகவில்லை?
ஓ ... அப்பாவிகளின்
உதிரங்கள்
வல்லரசுகளின்
கால்களைத்தான்
ஈரமாக்கிக்கொண்டிருக்கிறது.
மனித நேயத்திற்காக
எத்தனை நாள் பட்டினி கிடந்தாய்
இன்றோ - மனித நேயம்



பட்டினி கிடக்கிறது!
நீ வாழும்போது
அஹிம்சையிலே
தாங்கிய வதைகளும்
சாகும்போது தாங்கிய
குண்டுகளும் - இன்று
அஹிம்சைக்கு நடக்கிறது!
ஆனால் - இந்த உலகம்
இன்னும் இருப்பதால்,
நீ தூவிவிட்ட
உதிரத்திலெழுந்த உருவங்கள்
நிச்சயமாக
எங்கோ வாழ்கின்றன!
ஓ... நாதுராம் கோட்சேகளே
அவர்களை விட்டுவிடுங்கள்!

## விஞ்ஞான பூர்வ விளக்கம்

### இசையால் காய் கனியுமா?

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிர்வெண் கொண்ட ஒலி அலைகள் பொருளின் மீது படும் போது, அவ்வலைகளின் ஆற்றல் உட்கவரப்படுகிறது. இதன் விளைவாக ஆற்றல் பரிமாற்றம் ஏற்படுகிறது. எனவே, திடப் பொருளின் மூலக் கூறுகள் ஆற்றலை உட்கவர்வதால், அவை முன்னை விட துரிதமாக அதிர்வுற்று வெப்பமடைகின்றன. இதே போன்று ஒலி அலைகள் காயினுள்ளே ஊடுருவிச் செல்லும் போது வெப்பம் உண்டாகிறது. இதன் விளைவாகக் காய் கனிந்து பழமாகிவிடுகிறது. நடைமுறையில் நாம் காயைப் பழுக்கவைக்க அதன்மீது புகையை ஊதி வெப்பப்படுத்திப் பழுக்கவைக்கிறோம். எனவே, மிருதங்க இசையால் (ஒலியால்) காய் கனிந்தே ஆக வேண்டும் என்பது இயற்பியல் உண்மையாகும்.

—பேராசிரியர்:

ஏ. ஆர். ராமராஜ்

நன்றி!

இதயம் பேசுகிறது

---

ஜனவரி இதழில் வெளியான படத்திற்கு பல வாசகர்கள் எழுதி அனுப்பினார்கள். இருவருக்கு பரிசு கொடுத்துள்ளோம். முதலாவது பரிசு ஸ்ரீ யோசனு எழுதிய 'கல்யாண ஊர்வலம் வரும்' இவருக்கு ரூபா 15/- பரிசாக வழங்குகிறோம்.


இரண்டாவது பரிசு ரூபா 10/- சண்டியூர் திலீபன் எழுதிய "தவில் இல்லாத் தவில் கச்சேரி" அவர்களுக்கு வழங்குகிறோம்.

---

சோதிடம் நான் கல்வி மானாக இருப்பேனென்று கூறுகிறது. பாடசாலை புகு முகப்பரீட்சையில் சித்தியடையாததால் பாடசாலையில் இடமில்லையாம்! ஒன்றுமே புரியவில்லை.



---



● என் மகள் அந்நிய நாட்டில் வேலை செய்யிறவனைக் காதலித்ததால் பத்தாயிரம் மாசம் செலவு போகுது.

★ ஏன்?

● டெலிபோன் பேசுவதில் காசு கரியாகுது.

---

ஆசிரியர்: நின்றுகொண்டு தூங்கும் பிராணியின் பெயர் கூறு.

மாணவன்: குதிரை, ரயில் பிரயாணி.

— சர்மா

---

சினிமா போகவேண்டுமானால்
ஒரு சொட்டுக் கண்ணீர்;
ஜாக்கட் வேண்டுமானால்
இரண்டு சொட்டுக் கண்ணீர்.
புடவை வேண்டுமானால்
மூன்று சொட்டுக் கண்ணீர்.
நகை வேண்டுமானால்
நான்கு சொட்டுக் கண்ணீர்.

— நாடோடி


## " கோகிலம் "

கலை இலக்கிய ஏடு, கவிதை, கதை, கட்டுரை, இலக்கியச் சுவையான இனிய அம்சங்கள் நிறைந்த ஏடு.

**விலை ரூபா 3-50**

தொடர்பு கொள்ளுங்கள்:

**கோகிலம்**

சாய்ந்த மருது - (E. P.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவில் இல்லாத் : : தவில் கச்சேரி

சண்டியூர் திலீபன்

சின்னட்டியார் சிங்கப்பூர் செல்லவில்லை. சிங்கப்பூர்பற்றி பலரும் கூறியதைக் கேட்டே தானும் சிங்கப்பூர் போனதாகக் கூறுவர். சிலர் உண்மையில் நம்பியும் விடுவார்கள். நெடுக சிங்கப்பூர்பற்றியே அவர் பேசுவதால் சிங்கப்பூர் சின்னட்டியார் என்றே எல்லோராலும் அழைகேப்பட்டார்.

சிங்கப்பூராரின் பால்ய நண்பன் வேலுப்பிள்ளை சந்தியில் கவலையுடன் நின்றுகொண்டிருந்தார், சின்னட்டியார் அவரைக்கண்டதும் தனக்கு அரட்டை அடிப்பதற்கு ஆள் கிடைத்துவிட்டது என்ற உற்சாகத்தில் அவரை நெருங்கி ''என்ன மச்சான் ஏதும் சோகக் பாத்திரத்தில் நாடகம் நடிப்பதற்கு ஒத்திகை பார்க்கிறுயா ஒரே வாட்டமாயிருக்கு என்ன சங்கதி'' என்று கேட்டார்.

''இல்லையப்பா! நாளைக்கு என் மகளுடைய கல்யாணவீடு தவில்காரர் இரண்டாயிரத்து ஒருரூபா கேட்கினம். அவ்வளவு காசு என்னிடம் இல்லை. பொம்பிளை மாப்பிளை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு பிள்ளையார் கோவிலுக்குப் போகவேணும் என்னுடைய தராதரத்திற்கு தவில் கச்சேரியில்லாவிடில் ஊர் என்னை மதிக்காது அதுதான் சோக நாடகம்'' பெருமூச்சுடன் கூறினுர் வேலுப்பிள்ளை!

வேலுப்பிள்ளை ஒன்றுக்கும் யோசியாதை ஒரு கால் அடித்தேன் என்றுல் எனக்கு மூளை வேலைசெய்யும். நான் உன்னுடைய கவலைக்கு மருந்து சொல்வேன் என்ருர். அந்தக்காலத்தில் நான் சிங்கப்பூரில் இருக்கும் பொழுது சீனுக்காரன் எதற்கும் என்னிடம்தான் ஆலோசனை கேட்க வருவான். இங்கைமாதிரி கசிபா அங்கை அரைப்போத்தல் பிறன்டி அடித்துவிட்டு ஆலோசனை சொன்னுல் சீனுக்கசரன் அப்படியே அசந்துவிடுவான்". வேலுப்பிள்ளையார் சின்னட்டியாரை மனதுக்குள் திட்டிக்கொண்டே வேறுவழியில்லாமல் மகனைக் கூப்பிட்டு அரைப்போத்தில் கல்லோயாரசம் வாங்கி வரும்படி அனுப்பினுர்.

கல்லோயாரசம் வயிற்றுள் போனதும் சின்னட்டியார் உஜாரானுர் ''இந்தா வேலுப்பிள்ளை நீ ஒன்றுக்கும் கவலைப்படாதை நாளைக்கு உன் மகளின் கல்யான வீட்டிற்கு நாதஸ்வரசக்கரவர்த்தி இராஜரட்ணம் பிள்ளையும், காரை குறிச்சி அருணுசலமும் நாதஸ்வரம் வாசிப்பார்கள். தவில் மேதை தஷ்ணுமூர்த்தி தவில் வாசிப்பார் நான் இன்று போய் நாளை வருகிறேன் என்று கூறிக்கொண்டே நடையைக்கட்டினுர்.


'' வேலுப்பிள்ளைக்குத் தலை சுற்றியது '' அமரராகிவிட்டவர்கள் கச்சேரிசெய்வார்கள் என்று கூறிவிட்டு போகிறுனே. பாவிப் பயல்: குடியர்லை இவனுக்கு ஈரல்தான் பழுதாகிவிட்டது என்று பார்த்தன் மூளையும் வறண்டுவிட்டுது போலை '' என்று புறுபுறுத்துக்கொண்டார்.

மறுநாட் காலை கல்யாணவீடு களை கட்டியது, ஊர்வலம் ஆரம்பமாகியது. சின்னட்டியார் தனது தலையில் பெரிய ரேப் றெக்கோடரை வைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினுர், கச்சேரி பிரம்மாதமாக ஒலித்துக்கொண்டிருந்தது. வேலுப்பிள்ளையரும் குழுமியிருந்த மக்களும் மெய் மறந்து ரசித்துக்கொண்டே நடந்தனர்.

சின்னட்டியார் மெதுவாக வேலுப்பிள்ளையை கூட்பிட்டு '' ஏனப்பா வேலுப்பிள்ளை இந்த கச்சேரியை சவாரித்தம்பரும் சின்னக்குட்டியும் கேட்டு ரசிச்சால்தான் எனக்கு சந்தோஷமாக இருக்கும். உடனே கார் அனுப்பி அவர்கள் இருவரையும் அழைத்து வரச் சொல்" என்ருர்.

மின் வெட்டியது போல் வேலுப்பிள்ளையருக்குத்தான் அவர்களுக்கு சொல்ல மறந்த விஷயம் நினைவுக்கு வந்தது. உடனே மகனை காருடன் அவர்களை அழைத்து வர அனுப்பினுர். சின்னட்டியார் பெருமிதத்துடன் ராஜநடை பயின்ருர்.

## சிரித்திரன் அகராதி



கல்வி: பரீட்சைகளென்னும் தடைதாண்டி ஓட்டப் பந்தயம்.

உதடு: வெண் சுருட்டின் இடுகாடு.

வெங்காயம்; உரிய உரிய துகில் தோன்றும் திரௌபதைக் காயம்.

மாமன்: மருமகனின் தனுதிகாரி.

கட்சி: ஒரு சிலர் உயர்வுக்காகப் பலர் தோள்கொடுக்கும் பல்லக்கு.

மொட்டைக் கடிதம் : திருமுகம் காட்ட விரும்பாதோர் அனுப்பும் திருமுகம்.

பத்திரிகை: அயல்வீடு வாசிப்பதற்கு நாம் வாங்கும் ஏடு.

மாரி: குப்பை வாரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



❋ நீங்கள் திரையில் ரசித்த கனவுக் காட்சி எது?

■ அப்படி ஒன்றும் கூறுவதற்கில்லை. என் கனவு முழுக்க "லிங்கம் சில்க் ஹவுஸ்" பற்றியதே! நான் கனவில் காண்பதெல்லாம் லிங்கம் சில்க் ஹவுஸ் ஆடை அணிகளே!

## அழகு ஆடைகளுக்கு ஓர் அழகாபுரி

லிங்கம்ஸ்

சில்க் ஹவுஸ்

மயூரா அன்ஜில் சேட்டிங் - சூட்டிங்

வகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்

# லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்

18, நவீன சந்தை, - மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முக்கிய குறிப்பு

நாளுக்கு நாள் ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. அத்துடன் ஒருமுறை பிரசுரித்த பின்னும் மீண்டும், மீண்டும் விண்ணப்பிக்கிறார்கள். ஒரு சிலர் பல் வேறு விலாசமிட்டு அனுப்புகிறார்கள் இதனால் ஒருசிலரது விண்ணப்பமே மீண்டும் மீண்டும்பிரசுரிக்கப் படுகிறது. இதனால் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக 5 ரூபா முத்திரை இணைத்து அனுப்பும் விண்ணப்பமே பிரசுரிக்கப்படும்.

A. M. Suliman
Baleha
P. O. Box 2663 B. S. B.
Bruni

● பஸ் நடத்துனர் 30
T. V. றேடியோ, பேனா நட்பு.

S. M. Sellappah (7661) 27
S. C. C. Co,
P. O. Box 258
Alkhobar 31952
Saudi Arabia.

● SECURITY

☐ முத்திரை, பழைய நாணயங்கள் சேகரித்தல், கடிதத் தொடர்பு.

நா. சோதிலிங்கம் 20
C/O. வே. நாகலிங்கம்
7-ம் வட்டாரம், புங்குடுதீவு.

● வியாபாரம்

☐ பேனா நட்பு, வானொலி, பத்திரிகை, சினிமா, ஜோக் அடித்தல்.

S. Daniel 20
218, Deteaes Avenue,
Alvai north, Alvai.

● STUDENT

☐ Comics reading, Pen Pals, Quotation Radio, Collecting, Ginima.

S. Packiyannathan 23
Konthakkaran Kulam,
Omanthai.
T. V, Video, Penpals

கு. தர்மரட்ணம்
ஆஸ்பத்திரியடி, கொக்கிளாய்.

● கடை

☐ T. V. நாவல்கள், வானொலி

இஸட். எம். மன்சூர் 20
வீரமுனை வீதி, சம்மாந்துறை - 4

● மாணவன்

☐ வானொலி, நாவல், பத்திரிகை.

S. சந்திரகுமாரன்
அந்திரான் கொலனி
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

● மாணவன்

☐ வானொலி, பத்திரிகை, நண்பர், T. V.

---

★ '' சினிமா எனது சாதனை வீணை எனது ஆராதனை '' என்று கூறிய பாலச்சந்தருக்கு அண்மையில் மதுரைக் கலைச்சங்கம்.

' மதுரகலா பிரவீனு ' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது அவரைச் சிரித்திரன் வாழ்த்துகிறான்.

### 1. நிருபரின் கடமை.

1964ம் ஆண்டு சைகேப்யான் ஒரு முதிர்ந்த பௌத்தபிக்கு அரசின் மத நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றுத் தீக்குளித்தார். இதை பீட்டர் நூர்னட் என்ற நிருபர் படம் பிடித்தார்.

பின்னர் ஒருபொழுது அவர் இதை நினைவு கூர்கையில்; ''நான் மனிதன் என்ற ரீதியில் பிக்குவிடமிருந்து எண்ணைத் தகரத்தைப் பிடுங்கி அவரைத் தடுத்திருக்கலாம். நிருபர் என்ற முறையில் என்னால் அதைச் செய்யமுடியவில்லை.''

### 2. என்னே பொருத்தம்!

'Dagbladet' என்ற நோர்வேத் தினசரியில்; தன் கணவனைப் பிரிய எண்ணிப் புதியதுணை தேவை என்று 40 வயதுப் பெண்ணொருத்தி தன் தகமைகளுடன் விளம்பரம் செய்திருந்தாள்.

வந்திருந்த கடிதங்களில் அவளைக் கவர்ந்த ஒன்று!

''உன்னைப்போல உள்ளக் குமுறல், மனப்பாரத்துடன் வசித்து வருகிறேன். நானே நீ தேடுபவன் நானும் நீயும் இணைந்தால் சென்ற காலங்களில் நாம் இழந்ததைப் போல நூறு மடங்கு இன்பத்தைப் பெருக்கிக்கொள்ளலாம்.''

இதை எழுதியவர் அப்பெண்ணின் கணவர்தான். இப்போது மன ஒற்றுமையுடன் வசித்து வருகின்றனர்.

### சிரித்திரன் பேனா நண்பர் கழகம்

விலாசம்..................................................

தொழில்.................................. வயது....................


பொழுது போக்கு..........................................

இத்துடன் ரூ 5/- முத்திரை இணைத்துள்ளேன்

கையொப்பம்.............................. திகதி....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● செ சிவச்ந்திரன், அக்கரைப் பற்று.

கே; மகுடியாரே... எமது திரு நாட்டின் இன்றைய நிலை என்ன?

ப; திருடன் தாலி திருட வருகிறான்... தாலிகட்டவருபவன் வேலியோடு எல்லாம் திருட வருகின்றான்.

● மு. தமிழ்ச்செல்வி, மானிப்பாய்

கே: இசை எப்போது பிறக்கிறது. வசை எப்போது பிறக்கிறது?

ப: வாத்தியங்களின் இசையில் இசை பிறக்கிறது. வித்துவான்களின் முரண்பாட்டில் வசை பிறக்கிறது.

● கி. வேதமுத்து, பளை.

கே. அரசியல்வாதிகள் அனுதாபத்திற்குரியவர்கள் என்கிறேன்?

ப: ஆம் தம்பி... அவர்கள் உண்மை பேசினாலும் மக்கள் நம்பத்தயாராயில்லை.

● ஏ. எம். அபூபக்கர், கல்முனை

கே: நல்லவன் இறந்தால்?

ப: அவன் நறுமனம் இறந்த பின்பு நறுமணம் வீசும்.

● சு. ரவீந்திரன், அல்வாய்.

கே: புதுமைக் கருத்துக்கள் எழுதுபவனுக்கும் புளித்துப் போன கருத்துக்களை எழுதும் எழுத்தாளனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: ஒருவர் நீர்வீழ்ச்சியில் தொட்டு எழுதுபவர். மற்றவர் சகதியில் தொட்டு எழுதுபவர்.

● க. அருள்ஜோதி, வசாவிளான்.

கே. மகானுக்கும் துஷ்டனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: துஷ்டன் உயிரோடு இருக்கும் போது பேசுவான். மகான் இறந்த பின்பு பேசுவான்.

● வி. முருகவேள், நவாலி.

கே: கட்சிக்கு காக்கா பிடித்து பதவி உயரும் உத்தியோகத்தர் பற்றி உமது கருத்து?

ப: வாலாட்டி உயரும் பட்டங்கள்.

● மு. கலைச்செல்வி, பரந்தன்.

கே; பண்டிகை தினங்களன்று நீங்கள் ஏழைகளைச் சிந்திப்பதுண்டா?

ப. பண்டிகை தினத்தன்று ஏழைக் குழந்தைகளுக்கு பட்டாசும் மிட்டாசும் ஏது என்று எண்ணுவதுண்டு.

● சி. வத்சலா, கிளிநொச்சி.

கே: பெண்ணின் ஆத்மாவை ஆராதனை செய்யாது அவளின் உடலை ஆராதனை செய்யும் பத்திரிகையாளர் பற்றி உமது கருத்து?

ப: காக்கை யாக்கையைத் தானே உவக்கும்

● மு. பரமு, வவனியா.

கே: புகழ் என்பது என்ன?

ப: வல்லமை இல்லாதவனுக்கு அது மாரீசமான் வல்லமையுள்ளவனுக்கு அது சகுந்தலையுடன் வளர்ந்த மான்.

● சி. திருமகள், ஆனைக்கோட்டை.

கே: வல்லமை இல்லாத ஆட்சியில்?

ப: அடுப்பில் காளான் முளைக்கும். நாட்டில் கட்சிகள் காளான் போல் முளைக்கும்.

● மு. புகழேந்தி, திருமலை.

கே; லெனின், லிங்கன் - இவர்கள் பற்றி உமது கருத்து?

ப: மானுடத்திற்கு மகுடம் சூட்டிய மகான்கள்.

● சி. எம். அஸீஸ், மன்னார்.

கே: தந்தை மகற்காற்றும் உதவி என்ன?

ப; இலக்கணமாயிருக்க வேண்டும் இலாக்கணமாகவல்ல.

● க. தமிழ் செல்வன், பளை.

கே: அன்பு எப்படிப்பட்டது?

ப: மனிதன் உயிர் வாழ மருத்துவ விஞ்ஞானம் கண்டுபிடித்த மருந்திலும் மேலானது.

● தெ. ராசதுரை, வாழைச்சேனை.

கே: காதல் எப்படிப் பட்டது மகுடியாரே?

ப; காதலியை கழுகுக் கண்ணால் பார்த்துத் திரியும்.

● மு. தையல்நாயகி, அளவெட்டி.

கே: விதியின் கையில் நாம் கையாலாகாதவர்களா?

ப; யார் சொன்னது. விவேகத்துடன் வியர்வை சிந்தினால் விதியும் எமக்கு வாய் பொத்தி சேவகம் செய்யும்.

● செ. துரைராசா, கல்வியங்காடு.

கே: இம்முறை வந்த ஆடிக் கலவரத்தின் பின் உமது மனநிலை எப்படி இருக்கிறது மகுடியாரே?

ப: வரும்பௌர்ணமிகளெல்லாம் ஆடி அமாவாசையாயிருக்கிறது.

● து. மகேந்திரன், கழுவாஞ்சிக்குடி.

கே: மகுடியாரே.. கலைஞர் கருணாநிதியவர்களின் பேச்சுக் கேட்டிருக்கிறீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: பலமுறை கேட்டிருக்கின்றேன் அதை திருவெண்காடு சுப்பிரமணியம்பிள்ளையின் மகுடி யென்று சொல்லவா, அல்லது ராஜரட்ணம்பிள்ளையின் தோடியென்று சொல்லவா? அல்லது வானம்பாடியின் கானாமிர்தமென்று சொல்லவா... கருணாநிதி ஒரு கர்ணாமிர்தமே.

● சி. விக்கினேஸ்வரன், முள்ளியவளை.

கே: சமதர்மவாதம் இலங்கையில் தோல்வியடைந்ததற்குக்காரணம் என்ன?

ப: ஒரு பக்கம்சாய்ந்ததால் அது பாரிசவாதமேற்பட்டு வாழாதிருக்கிறது.

● வி. ஜானகி, கிளிநொச்சி,

கே: அன்று திருமணம் செய்து வைப்பதற்கு சுயம் வரம் நடாத்தினார்கள்... இன்று இல்லையே!

ப: ஏனில்லை... ஒரு பெண் பல ஆண்களுக்கு காதல் மடல் எழுதி ஒருதனைத் தேர்ந்தெடுத்து மாலையிடுவதும் சுயம் வரம்தானே.

● த. வடிவேல், கொக்குவில்.

கே: எது மன்னிக்க முடியாத குற்றம்?

ப: தமது குறைகளைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு மற்றவர்களின் குறைகளை மேசைக்குக் கொண்டு வருவது.

● செல்வி ரதினி நாகநாதன், மானிப்பாய்.

கே: உயர்வு எது? தாழ்வு எது?

ப: அறிவெனும் கலத்தில் விண்வெளியில் உயர்ந்து மண்வெளியைப் பார்த்தால் எல்லாம் சமம்.

● த. முத்துவடிவேல், வல்வெட்டித்துறை.

கே: யாழ் மக்கள் எல்லாவற்றிலும்மேலாக மதிப்பது எதை?

ப: தமது கண்மணிமகளிலும் தாம் பெற்ற கண்மணிகளின் கல்வியை.

● சி. கனகசபை, துன்னாலை.

கே: எவன் முட்டாள்?

ப: எல்லா மொழியையும் கற்றுப் பண்டிதனாகிவிட்டுப் பாமரனுக்கு ஒரு கருத்தும் சொல்லாதவன் வடி கட்டிய முட்டாள்.

□ ப. சிவகுருநாதன், கந்தர்மடம்

கே: ஒருவனின் வெற்றியின் இரகசியம் என்ன?

ப: முயற்சியெனும் மந்திரத்தைத் தவிர அவர்களிடம் வேறு மூலி இருந்ததாகத் தெரியவில்லை.

□ செல்வி மனோரஞ்சிதம் தம்பையா, நல்லூர்.

கே: சோம்பேறியால் செல்வத்தைக் காண முடியுமா?

ப: பூபாளத்தோடு எழுபவன் தங்கப் பாளத்தோடு வாழ்கிறான்.

□ க. கனகராசா, காத்தான்குடி.

கே: உண்மைத் துறவியை அழகியால் கவர முடியுமா?

ப: தங்கத்தைக் காந்தக்கல் இழுக்குமா?

★ திருமதி தர்மகுலசிங்கம், மாவிசந்தை.

கே: மிருதங்கச் சக்கரவர்த்தி என்ற படத்தில் நாதத்தால் காய்களைக் கனிய வைக்கிறாரே சிவாஜி. இதுமுடியுமா?

ப: ஒலியென்னும் மத்து கலக்கித் திரண்டதே இந்த வெண்ணையென்ற உலகம். ஒலி அதிர்வில் தோன்றிய உலகில் காய் கனிவது என்ன சந்தேகமா!

□ சாந்தி ராமநாதன், சங்கானை

கே: பெண்களுக்கு எப்பொழுது துணிச்சல் உண்டாகிறது.

ப: தன் பிள்ளைகளின் தந்தை வேறு தாரம் தேடும்போது.

□ கந்தையா அருந்தவராசா, சங்கானை.

கே: வளருவது எது தேய்வதுஎது?

ப: வளருவது துவேஷம். தேய்வது நாடு.

□ நாகமணி மகேந்திரலிங்கம், சங்கானை.

கே: அழகுள்ள பெண்கள் தங்களை மேலும் அழகு படுத்துவது பற்றி உங்கள் கருத்து?

ப: ரோஜா மலருக்குச் சாயம் பூசி அத்தர் ஊற்றுவது போன்றது.

□ அன்பிதயன் ஸிறுஜ், கல்முனை - 4.

கே: எழுத்தாளன் பெரும்பாலும் வாழ்க்கையில் முன்னேறுவதில்லையே!

ப: எழுத்தால் கறுப்புப் பணம் தேடமுடியாதே.

□ கலைப்பிரியா, கல்முனை

கே: சிரித்திரன் நகைச்சுவைகளைக் கண்டு சிரிப்பு வரவில்லையே?

ப: மலர்ச்செடி மலராதுவிட்டால் மண்ணின் மந்த நிலையைக் குறிக்கும். குரேட்டனுக்கு உயர் ரக உரமிட்டாலும் அது மலர்வதில்லை. கோளாறு எங்கே புரியவில்லையே!

□ செல்வி சுலோசனா ராமலிங்கம், திருமலை.

கே: நீர் யாருக்குப் பயம்?

ப: கடிக்க வரும் பாம்பிற்கு... அதிலும் கூட "போர்" அடிக்க வரும் மனிதனுக்கு.

---

'மகுடி'யில் இடம் பெறும் தரமான கேள்விகளுக்கு மாதம் ரூபா 10/- பரிசு அளிக்கப்படும். கூப்பன் இணைத்து வரும் கேள்விகளுக்கு மட்டும். (ஆர்)

★ இக் குறியிட்ட கேள்வி இம் மாதம் பரிசு பெறுகிறது.

**மகுடி,**
**சிரித்திரன்,**
550, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்
அழகிய
அச்சக வேலைகட்கு
பற்ஸ் பிறிண்ரேஸ்
601, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

* * *

உங்கள் வீட்டு
மின்சார பாவனைக்குத்
தேவையான
அத்தனையும்
எம்மிடமுண்டு
பற்ஸ் பவர் எலக்றிக்கல்ஸ்
601, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## நேயம் நயந்தவை



**செல்வன் செ. தங்கராஜன்**
13-1 கொண்டலடி லேன்,
நல்லூர்-யாழ்ப்பாணம்.

ஜனவரி மாத சிரித்திரன் கண்டேன். அட்டைப் படம் வெகு அருமை. நிச்சயமாக அந்தப் பால் பொங்கியே தீரும்.

நிலைக் கண்ணாடியில் எமது வீதிகளின் நிலைபற்றி நன்ருகத் தெரிந்தது.

மகுடியில் வருவது நாதம் அல்ல வேதம். " கலை உலகிற்கும் நிஜ உலகிற்கும் ஒற்றுமையுண்டா"? என்ற கேள்விக்கு " கலை உலகில் உண்மை மேடையேறுகிறது. நிஜ உலகில் உண்மை பாடை ஏறுகிறது, " என்ற பதில், அருமை. இரண்டு வரிகளுக்குள் இரண்டாயிரம் கருத்துக்களை உள்ளடக்கிச் சொல்ல மகுடியால்தான் முடியும்.

மகுடி என்பது ஒரு குழல் அல்ல (திருக்)"குறள்"

" மனிதன் வாகனங்களுடன் கிளித்தட்டு விளையாடும் மைதானம் - வீதி" என்ற சிரித்திரன் அகராதி அலாதியானது. அதுக்கு ஒரு டபிள் சபாஸ்.

" பொருத்தங்கள் "என்ற குட்டிக் கதைமூலம் சீதனப் பேய்களுக்கு மட்டையடி கொடுத்திருக்கிறார் ச.பத்மநாதன். அவருக்கு என் பாராட்டுகள்.

இலக்கிய உலகில் சீராக நடைபோடும் சிரித்திரா உன் தயவால் சிரிப்புக்கும் சிந்தனைக்கும் என்றுமே பஞ்சம் ஏற்பட்டதில்லை.

**எம். எஸ். செபஸ்ரியன்**
கண்டல்
திருக்கேதீஸ்வரம்

ஜனவரி மாதச் சிரித்திரன் இதழ் வாசித்தேன் எண்பத்தி நாலில் நல்வழி பிறக்கட்டும். என்ற தலையங்கம். மிகவும் சிந்தனையைத் தூண்டும் விதம் அமைந்திருந்தது. மற்றும் திரைத் திராட்சை வரலாற்று வெல்லம் பல ரசக் கலசம் அருமை செம்பியன் செல்வனின் ' முள் முடி ' சுருக்கமாக இரண்டே பக்கங்களுள் மிகவும் சிறப்பாக வளஙகிவிட்டார் அவருக்கு எனது பாராட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன - அகத்தில் இருக்க வேண்டிய நூல்

**திருக்குறள்**

மனை - அகத்தில் இருக்கவேண்டிய நூல்

**முயல் மார்க் நூல்**

உங்கள் அழகிய தையல் வேலைகட்கு "முயல் மார்க்" நூல்களையே பாவியுங்கள்

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரட் மனுபக்சரிங் கம்பனி**

**கொழும்பு-12**



☐ நேற்று தான் சுவரில்லாத சித்திரங்கள் படம் பார்த்து விட்டு வீட்டுக்கு வந்தபோது சுவரில்லாத வீடாக என் வீடு இருந்தது.

● அடடே ஏன்?

☐ அடை மழை காரணமாக சுவர் விழுந்துவிட்டது

— ச. ரா. பா.

புத்தாண்டு புது வகுப்புப் புகும் மாணவ மணிகளுக்கு

எமது புதுவருட வாழ்த்துக்கள்

**ராஜா புத்தக சாலை**

பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள், உள் நாட்டு, வெளி நாட்டு, சஞ்சிகைகள், வாழ்த்து மடல்கள், கலண்டர், டயரிகள் அனைத்தையும்

ஒரே இடத்தில் சகாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**ராஜா புத்தகசாலை**

ராஜா அச்சகம்

அச்சுவேலி

அழகிய அச்சு வேலைகளுக்கு

**ராஜா அச்சகம்**

மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுண்டு!



நண்பர்; ஒரே கூரையில் மக்களுக்கு வேண்டிய சகல பொருட்களும் வாங்கலாம் என்று இப்போ கடைகளில் விளம்பரம் வருவது போல என் வீடும் ஆகிவிட்டது.

மற்றவர்: எப்படி?

நண்பர்: ஒருவர் என் வீட்டில் சைக்கிலைக் கொண்டு போவார், இன்னொருவர் கசெட்டைக் கொண்டுபோவார் இப்படியே மண் வெட்டி, டெக், குடை என்றெல்லாம் கிணற்றில் தண்ணி எடுப்பது வரை போகிறது.

— ச. ரா, பா.



● என் மனைவி ஒரு படிதாண்டாப் பத்தினி.

☐ ஏன் அப்படிச் சொல்கிறாய்?

● வீட்டுக்குள் இருந்த குப்பையைக் கூட்டி ரோட்டில் உள்ள முனிசிபல் தொட்டியில் போடாமல் வாசற்படியில் நின்றபடி வீசிவிடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறு நாவல்

# சைக்கிள்

செ. யோகநாதன்

தமயந்தி தனக்கு ஒரு சைக்கிள் வாங்கித்தர வேண்டும் என்று சொன்னதும் எங்கள் வீட்டிலே குட்டிப் பூகம்பமொன்று உருவாகிவிட்டது. முதலிலே எனது தாயார்தான் என்னைத் திட்டத் தொடங்கினாள். கலி காலம் முற்றியதுக்கு பெண்களின் அடங்காப்பிடாரித் தனங்களும் முக்கிய காரணமென்பது அவளுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. பல தடவைகளில் என்னுடைய மனைவியோடயே அவள் புறுபுறுத்திருக்கின்றாள். என்னுடைய மனைவி வினோதினி அம்மா சொல்வதை இப்போதெல்லாம் அவதானித்துக் கேட்பதில்லை. ''எவ்வளவு சொன்னாலும் வயது போன மனிஷர் தாங்கள் நினைக்கிறதுதான் சரியென்று பிடிவாதம் செய்வினை. கத்துகிற அளவுக்கு கத்திப்போட்டிருக்கட்டும். ஏன் வீணாக சச்சரவுப்படவேணும்?''

அம்மா என்னைத் திட்டத் தொடங்கியதும் அவ்விடத்திலிருந்து வினோதினி மெதுவாக எழுந்து போய் விடுவாளென்றுதான் நினைத்தேன். ஆச்சரியம்! அவள் இருந்த இடத்திலேயே அசையாமல் உட்கார்ந்திருந்தாள். எதிரேயுள்ள மல்லிகைப் பந்தலைப் பார்த்து விட்டு அர்த்த புஷ்டியாக என்னை நோக்கினாள் வினோதினி. பின்னர் தமயந்தியை ஏறிட்டாள். உதட்டைச் சுழித்தவாறே, ''உனக்கு இப்ப என்ன அவசரத்திற்காக சைக்கிள் வேணும்?'' என்றாள்.

அம்மாவின் முகத்திலே இலேசான வெளிச்சம், ஆயினும் இனி வரப்போகிற வார்த்தைகளுக்காய் காத்திருப்பவள் போல மௌனம் சாதித்தாள். எனது மனநிலையும் அப்படித்தானிருந்தது.

''ஆண் பிள்ளைகள் போல நீயும் ஊர் சுற்றித்திரியவா போகிறாய்? முதலிலை படிப்பைக் கவனி. பிறகு மற்ற விஷயங்களைப் பார்க்கலாம்... சைக்கிள் வேணுமாம் சைக்கிள்... கண்டறியாத சைக்கிள்...''

வினோதினி, இதுதான் இந்த விஷயத்திற்கான இறுதித் தீர்ப்பு என்ற முகபாவத்தோடு அழுந்திய குரலிலே கூறியபடியே எழுந்துவிட்டாள். அம்மாவுக்கு நல்ல சந்தோஷம். என்னை ஏளனங் கலந்த கோபத்தோடு பார்த்தாள். ''பொம்பிளைப்பிள்ளையை வளர்க்கிற முறையைப் பற்றி எங்களுக்குத் தெரியும்... நீ உன்னுடைப் அலுவலுகளைப் பார்த்துக்கொள்... உன்னுடைய போக்குக்கு இவளை வளர்த்தால் அல்லிராணியாய் வந்திடுவாள்...''

தமயந்திக்கு ஜூன் மாதம் பதினைந்தாம் திகதியன்று பதினாலு வயது முடிந்து பதினைந்தாகின்றது பத்தாம் வகுப்பிலே படிக்கிறாள். சுறுசுறுப்பான பெண் மனதிலும், வார்த்தைகளிலும் எந்நேரமும் துடிப்புத்தான். உலகின் சந்தோஷங்களெல்லாம் கண்களிலே சிரித்திருந்தன. அந்த விழிகள்தானிலே இப்போது கண்ணீர் அரும்பிக் கோர்வையிட்டிருந்தது. பிரயத்தனத்தோடு அழுகையை வாய்க்குள்ளே நசுக்கிக்கொண்டிருந்தவள் நான் கிட்டவாகப் போனதும் பொருமி வெடித்தாள்.

''அழாதை... இவையள் கத்திப்போட்டிருக்கட்டும் கட்டாயம் நான் என்னுடைய பிள்ளைக்கு சைக்கிள் வாங்கித் தருவன். முகத்தைக் கழுவி விட்டுப் போய்ப் படியுங்க... அழுதால் தலையிடிக்கும்... நான் சொல்வதை கேட்கவேணும்...''

வெளியே குருவிகளின் கத்தல் காற்றின் சுழிப்பினுள்ளே மடங்கி இலேசாகக் கேட்டது. கண்களைத் துடைத்துக்கொண்டே தமயந்தி கிணற்றடிப் பக்கமாக நடந்தாள்.

வினோதினி மெதுவாகச் செருமிக் கொண்டு எனக்குப் பின்னே வந்து நின்றாள்.

''வினோ, தமயந்தி ஆசைப்பட்டுக் கேட்கிறாள்... ஆயிரத்தி ஐந்நூறு ரூபாவுக்குள்ளை ஒரு ஏசியா பைக் வாங்கிவிடலாம். பள்ளிக்கூடத்துக்கு போய்வர மட்டுமில்லை... எல்லாத்துக்குமே உதவுந்தானே...''

- அந்தக் குடும்பம் பெரிய இரவல் பேர்வழிகள்,
- ஏன்!
- தந்தை புத்தகங்களை இரவல் வாங்கிட்டுத் தரவில்லை. மகன் அலுமாரியை வாங்கியிட்டுத் திருப்பித் தரவில்லை!

— மாயன்

மங்கிக்கொண்டு வருகிற வெளிச்சத்திலே வினோதினியைப் பார்த்தேன். முன்னர் போலவே இறுகிப் போன முகம். சிரிப்பற்ற கடுமை பொதிந்த முகம். என்னை இகழ்வாகப் பார்க்கின்ற முகம்.

''நீங்க்ள் ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறீங்கள்? தமயந்தி குழந்தைப்பிள்ளையில்லை. குமர்ப்பிள்ளை. இந்த வயதிலைதான் கட்டுப்பாடாக வளர்க்க வேணும்...... அவளை ஏன் ஆம்பிளை போலை வளர்க்க நினைக்கிறீங்கள் சைக்கிள்... சைக்கிள்... சைக்கிளில்லாட்டில் இப்ப என்ன குறை? சைக்கிளை வைச்சு என்ன செய்யிறது?''

வெளியே சத்தம் கேட்கிறது. சஞ்சயன்— எனது மூத்த மகன் சைக்கிளை உருட்டியவாறு வந்து கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கின்றான். வயதை மீறிய வளர்த்தி. அலைந்த தலை மயிர். தாயைப் போலவே வட்ட முகம். இப்போது தாயைப் போலவே இறுகிப் போய் சினங் கொதிக்கிற முகம்.

''அப்பா, இனியென்றாலும் இந்தச் சைக்கிளுக்கு நல்ல ரயர், டியூப் வாங்கித் தாருங்க. போற வழியிலேயே பஞ்சராய்ப் போட்டுது. எல்லா அலுவலும் பாழாய்ப் போச்சுது... கால் முறிஞ்சது போலை...''

சைக்கிளை செவ்வரத்த மரத்தோடு சாத்திவிட்டு உஸ்ஸென்று பெருமூச்சு விட்டான் சஞ்சயன். ஷேர்ட் வியர்வையால் தெப்பமாகியிருந்தது. மகனைப் பார்த்தவாறே தாய் சொன்னாள்;

''சரி சரி போய் முகத்தைக் கழுவு தம்பி...''

கூறிமுடித்தவளின் மனதிலே என்னவோ பளீச்சிட்டிருக்க வேண்டும். குரலிலே கவலை படிய ''நாளைக்கு எத்தினையோ வேலையிருக்குது... இவனுடைய சைக்கிளுக்கும் வியாதி வந்திட்டுது... நாளைக்குக் காலையிலை பால் வாங்கிறது எப்பிடி? கடையிலை அரிசி வாங்க வேணும் லோன்றியிலை தமயந்தியின்ரை உடுப்புகள் எடுக்க வேணும்... பின்னேரம் மாலதி வீட்டிலை போய் அந்த யூனிபோம் தைச்சு முடிஞ்சிருந்தால் எடுத்து வாறதாக சஞ்சயன் சொல்லிக் கொண்டிருந்தவன்...'' என்றவள் துவாயால் முகத்தைத் துடைத்தவாறு வருகின்ற சஞ்சயனைப் பார்த்தாள்;

''சஞ்சயா, இப்ப கொண்டுபோய் இந்தச் சைக்கிளை ஒட்டிக்கொண்டு வரமாட்டியோ? நாளைக்கு எவ்வளவு வேலைகள் இருக்குது... துரைசிங்கத்தின்ரை சைக்கிள் கடையிலை போனால் அவன் ஒட்டித்தரமாட்டானோ?" தணிந்து வந்தது சஞ்சயனின் குரல்; 'நான் இப்ப அந்த வழியாலைதான் வந்தனான். துரைசிங்கத்தின்ரை மகள் செத்துப் போனதாம். கடை பூட்டியிருந்தது. இனி எப்ப திறக்குமோ தெரியேல்லை...'

நெற்றியைத் தேய்த்தவாறு யோசித்தபடி நின்றாள் விஜேந்தினி. நாளைய பிரச்சினை மனதினை அழுத்துகிறதென்பதை அவளின் முணுமுணுப்பு சொல்லிற்று. கொஞ்சம் முந்தித்தான் என்னிடம் அவள் கேட்டாள் ''சைக்கிளை வைச்சு என்ன செய்கிறது?''

சைக்கிள் இல்லாதது கால் முறிந்தது போல என்று சஞ்சயன் சொல்கிறான். சைக்கிள் இருக்குமாயின் பள்ளிக்கூடத்திற்குப் போகலாம். பால் வாங்கச் செல்லலாம், கடைகளுக்குப் போகலாம், பிறரோடு நெருக்கி அடித்துக் கொள்ளாமல் தனியாக, சுதந்திரமாக எவரிடமும் போய் வரலாம். எவ்வளவு நேரத்தை மிகுதியாக்கி அத்தியந்த நண்பனாக உதவுகிறது இந்தச் சைக்கிள். பஸ்ஸிலேயே அலுவலகம் சென்று வருகிற எனக்கு அதனுள்ளான நெருக்கடி, வியர்வை நாற்றம், அவமதிப்புகள் என்பனவற்றால் மறுகிக் கொண்டு கொழும்பிலே வாழ்கிற எனக்குத்தான் இந்த சைக்கிளின் பெறுமதி தெரிகின்றது. லீவிலே யாழ்ப்பாணம் வந்தால் விசுவாசமானதொரு நண்பனாக எனக்கு உதவுவது சஞ்சயனின் சைக்கிள்தான். இந்த முறை சஞ்சயனுக்கு கட்டாயம் புதிய ரயர், டியூப் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

''நாளைக்கு என்ன செய்யிறது? நடந்துபோய்தான் எல்லா அலுவல்களும் பார்க்க வேணும்...''

நான் பட்டென்று சொன்னேன்; ''தமயந்தியிடமும் ஒரு சைக்கிள் இருந்தால் இப்ப யோசித்துக் கஷ்டப்படத் தேவையில்லை... அவளே எல்லா அலுவல்களையும் பார்த்துவிட்டு வந்திடுவாள்...''

விஜேந்தினி அமைதியற்று என்னைப் பார்த்தாள்.

''ஏன் இப்படி வரிஞ்சு கட்டிக்கொண்டு அவளை ஒரு ஆம்பிளையாக்கிறன் என்று நிக்கிறீங்கள்? எனக்கு ஏதோ தலையிடி, உங்களுக்கு எந்த நிலைமையும் விளங்கவே இல்லை...''

தமயந்தி படிக்க உட்கார்ந்து விட்டாள். நான் முற்றத்திலே இறங்கி கொஞ்ச நேரம் நடந்து கொண்டிருந்தேன் பௌர்ணமி தினம். தங்கத்தட்டாக அடிவானிலே உருண்டு உயர்கிற முழு நிலவு மனதை நிறைத்தது. வேலியோடு நிற்கிற முல்லைப் பூ வாசனை மெல்லக் கமழ ஆரம்பித்தது;

(தொடரும்)

---


☐ கடவுளே நீ கூட வெளிநாடுகளுக்குப் போகிறாய். எனக்கு வெளிநாடு போகும் வாய்ப்பு இல்லையே.

● என்னது! கடவுள் வெளிநாடு போகிறாரா?

☐ ஆமாம். சிலைகளைக் கடத்தி வெளிநாடு கொண்டு போகிறார்களே.

—ச. ரா. பா.

---



● தன் மனைவி அழுததும் ராமசாமி ஓடிப்போய் என்னமோ எல்லாம் கொண்டு வந்து பார்க்கிறானே என்ன அது?

☐ அவன் வானிலை அவதான நிலையத்தில் வேலை பார்த்தவனும் எத்தனை மில்லி மீட்டரில் கண்ணீர் விடுகிறாள் என்று பார்க்கத்தான்.

—கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தரசிகளுக்கு
இனியதோர் நற் செய்தி!

ஹைலன்ட் பாற்சபையின் பட்டர்
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
தாராளமாக கிடைக்கிறது:
ஜீவ சத்துக்கள் அடங்கிய பட்டர்
இறக்குமதி செய்யப்பட்ட பட்டருக்கு
நிகரானது.

*விநியோகஸ்தர்:-*

**ஷோபா ஏஜென்சீஸ் லிமிட்**



**மேலும் உங்கள் சமையலுக்கு தேவையான**

- மிளகாய்த் தூள், கறிச்சரக்குத் தூள், மோர் மிள காய், அரிசி மா, ஆட்டா மா, குரக்கன் மா, மற்றும் பல கறிச்சரக்குத் தூள் வகைகள்—எல்லாம் உறுதி யான பைக்கட்டுகளில் நிறைவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

- சத்தானவை
- சுத்தமானவை
- சிக்கனமானவை.

- **L. P. GAS** — சுன்னாக வட்டாரமக்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

- குறைந்தவிலையில் நிறைந்த பைக்கட்டுகளில் உயர்ந்த தரம் – ஷோபா ஏஜன்ஸீஸ் லிமிட்டட் ஸ்தாபனத் தாரின் தயாரிப்புகளே.

194, K. K. S. ROAD, CHUNNAKAM.

SHOBA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானல் கரைகள்

**யோகேஸ் கணேசலிங்கம்**

ஒத்தாசை செய்ய ஆளின்றிக் குசினியில் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்த மலருக்கு வெளிக்கதவு தட்டும் சத்தம் எரிச்சலைக் கொடுத்தது.

நேரகாலமில்லாத மனுசர்! இந்த நேரம் ஒருத்தர் வீட்டிற்கு வந்தால் எத்தனை வேலைகள் பொறுத்துப்போகும். தனக்குள் புறு புறுத்தபடியே அடுப்பிலிருந்த குழம்பை இறக்கி வைத்தாள்.

மீண்டும் கதவு தட்டும் சத்தம் சாதில் விழ கதவின் வெளியே நிற்பவர் மீது அவளுக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

சீ... என்ன மனுசர் ஓட்டமும் நடையுமாக வாசலுக்கு வந்தவளது மனம், அந்த விருந்தாளியைத் திட்டியது.

மீண்டும் கதவு தட்டப்படுவதற்கு முன்னர் கதவைத் திறந்திட வேண்டும் என்ற வேகம் மலருக்கு. மலர் கதவைத் திறப்பதற்கும்... 'அம்மா!' என்றபடியே தேவி அவளது மார்பில் விழுவதற்கும் சரியாக இருந்தது. தேவி... தேவிதான் கதவின் பக்கத்தில் இருந்த பெரிய சூட்கேஸ் தேவி விமான நிலையத்தால் நேராக வந்திருக்கிறாள், என்பதை மலருக்கு உணர்த்தியது.

தன்னை அறியாமல் மலரது கைகள் தேவியின் முதுகைப் பரிவோடு தடவின. தேவி மலரது உடன் பிறவாச் சகோதரி.

தேவி அதே தேவி ஆறு மாதங்களுக்கு முன்பு பூரிப்போடு பெரிய ஒரு சாதனையை நிலை நாட்டிய பெருமையோடு தனக்குப் பயணம் சொல்லி அபுதாபி சென்ற அதே தேவி. குலுங்கி அழும் தேவியின் கண்ணீர்த் துளிகள் மலரின் தோளில் படுகின்றன.

தன்னுணர்வு பெற்ற மலர் தாங்கள் இருவரும் வாசல் கதவுக்கு வெளியே நிற்பதை அப்போது தான் உணர்ந்தாள். தேவியை அணைத்தபடி உள்ளே கூட்டிச் சென்றபின் சூட்கேசையும் உருட்டிக் கொண்டு உள்ளே சென்றாள்.

அம்மா உங்களைக் காணுவன் இந்த மண்ணிலை கால் வைப்பன் என்று நான் நினைக்கவேயில்லை... விம்மல்களினூடே வார்த்தைகள் வெளிவந்தன... மீண்டும் ஒன்றும் சொல்ல முடியாது குலுங்கி அழும் தேவி ஏதோ பாரதூரமாக நடந்திருக்க வேண்டும் என்று மட்டும் மலரால் ஊகிக்க முடிகிறது.

தேவி! ஆறுதலாக எல்லாம் கதைக்கலாம். போ போய் முகத்தைக் கழுவிவிட்டு வா. ஒரு தாய்க்குரிய பாசத்தோடு தேவியின் கையைப் பிடித்து குளியல் அறைக்குக் கூட்டிச் சென்றாள்.


தேவி முகம் கழுவி வருவதற்குள் ஒரு கோப்பியைத் தயாரித்து விட வேண்டும் என்று மலரின் கைகள் செயற்பட்ட போதும், மனம் அவளையும் மீறி ஓடத் தொடங்கியது.

தேவி...... விசுவாசமான வேலைக்காரி மலர் பள்ளிக்கூடம் செல்வதற்கும், வீட்டிலே பல வகையான உணவுவகைகள் செய்வதற்கும் ஏன் மலரின் குடும்பம் அமைதியாக நடந்து செல்வதற்கும் தேவி தான் அச்சாணி.

கடந்த ஆறு வருடங்களாக மலரின் மீதும் குடும்பத்தின் மீதும் அளவு கடந்த பாசத்துடன் நடந்து கொண்ட தேவிக்கு திடீரென வெளியூர் மோகம் ஏற்பட்டுவிட்டது. தேவியின் அதிஷ்டம் வெகுவிரைவில் ஓர் ஏஜன்சி மூலம் அபுதாபியில் ஹவுஸ் மெயிட் வேலை கிடைத்து பயணத்திற்கான ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினாள். வெளிநாட்டு வாழ்க்கை பற்றிப் பலவிதமான கதைகளை மலர் கேட்டிருந்த போதும் அவளால் தேவியைத் தடை செய்ய முடியவில்லை. எங்காவது போய் நல்லாய் இருக்க

---

## இரு எழுத்தாளர்கள்



ஒருவர்: நான் பத்திரிகைகளுக்கு எழுதுகின்ற கதைகளெல்லாம் திரும்பிவருகின்றன. ஒரே கவலையாக இருக்கின்றது.

மற்றவர்: இது என்ன கவலை - நான் எழுதும் "காசோலை" எல்லாம் திரும்பி வருகின்றன.

—ஜெய. விஜயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்டும் என்ற எண்ணத்துடன் வாழ்த்தி அனுப்பினுள் மலர். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தேவியை வழியனுப்பிய பின்பு கண்கள் குளமாக காரில் ஏறிய மலருக்கு உண்மையிலேயே சொந்தச் சகோதரியைப் பயண மேற்றிய உணர்வு.

அபுதாபி சென்று இரு கிழமைகளுள் சந்தோஷமான ஒரு கடிதம் மலருக்கு வந்தது. தேவி ஒரு வீட்டில் பணிப்பெண் தனி அறை ரீ. வி றேடியோ போன்ற சலுகைகள். கைநிறைந்த சம்பளம் மாதம் வீட்டிற்கு மூவாயிரம் அனுப்ப முடியும் பாஷை ஒரு பிரச்சனையாக இருந்த போதும் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்திஞல் வீட்டுக்காரப் பெண்மணியுடன் பேசுகிருள். கடிதத்தின் மூலம் தேவி தனது வேலையில் திருப்தியாக இருக்கிருள் என்று மலர் அறிந்து கொண்டாள்.

கடிதத்தை வாசித்த மலரின் இதயம் பெருமிதத்தால் விம்மியது. தேவி உண்மையான உழைப்பாளி. எங்காவது நல்லாக இருப்பாள். இந்தச் சம்பளத்தை எங்கடை ஊரில் இருந்தால் தேவியின் சீவியத்திலேயே காண முடியாது. தேவி இல்லாதது மலருக்குக் கை முறிந்தது போல இருந்தாலும் அபுதாபி சென்றதால் தேவி ஏதாவது சம்பாதிக்கலாம். உளம் நிறைந்த மகிழ்ச்சியுடன் தேவியின் கடிதத்தைப் பலருக்கும் காட்டி மகிழ்ந்தாள்.

மீண்டும் ஓரிரு கடிதங்கள் வந்தன. கடிதங்களின் தொனி ஒரே மாதிரியாக இருந்தது அவ்வளவுதான். இந்த ஆறு மாத இடைவெளியில் தேவி சந்தோஷமாக சகல சௌகரியங்களுடன் இருக்கிருள் என்ற நினைப்பில் மலர் இருந்தாள்.

குளியலறை திறக்கப்படும் சத்தம் கேட்டு மலர் தன்னுணர்வு பெற்றுள். "முகம் கழுவ என்று போய் முழுகீற்று வந்திட்டன். இந்த முழுக்கு உடலுக்கு மட்டுமல்ல அபுதாபி வாழ்க்கைக்கே ஒரு முழுக்கு!" தலைமயிரிலிருந்து ஈரம் சொட்ட தலையை துடைத்தவாறே வெளியே வந்த தேவியின் வாயிலிருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

வேலை செய்த வீடு பழக்கமான இடம் குசினியின் ஒரு புறமாக நின்ற படியே தேவி தலையைத்துடைத்தாள். "இந்த சுடச்சுட இந்தக் கோப்பியைக் குடி. பின்பு கதைப்பம்" உரிமையோடு தேவியின் கையில் கோப்பி ரம்ளரைக் கொடுத்த மலர் அவளை இருக்குமாறு ஒரு கதிரையை எடுத்துப் போட்டாள்.

கதிரையில் இருக்க சங்கோஜப்பட்டாள் தேவி. அந்த வீட்டின் பழைய வேலைக்காரிதானே அவள். "சும்மா யோசிக்காமல் இருந்து குடி தேவி நல்லாய்க் களைத்துப் போனுய். நீ இப்ப அபுதாபி சென்று திரும்பிய பிள்ளை நாங்ளே இன்றும் பிளேனே ஏற வில்லை" தேவியின் மனதிலிருந்த கவலையை நீக்குவதற்கு மலர் பேச்சை மாற்றினுள்.

"அபுதாபி... அந்தப் பெயரையே இனிச் சொல்ல வேண்டாம். என் சடலம் வர வேண்டிய இடத்திற்கு நான் வந்திருக்கிறன்" அம்மா தேவியின் வாயிலிருந்து வெறுப்புடன் வார்த்தைகள் வெளிவந்தன.

சரி... சரி கோப்பியைக் குடி முழுகின பிறகெண்டாலும் மனம் ஆறியிருக்கும் எண்டு நினைச்சன் இன்னும் கொதியோடு தான் இருக்கிருய்.

"கொதி நான் கொதிச்சு என்ன பயன்? என்ரை கொதி அவளை அந்த வெறுயளை அந்தக் கொலைகாறனைக் கொன்ற பின்தான் அடங்கும்" தலைவிரிகோலமாக நின்ற தேவியின் முகம் பத்திர காளியாக மாறி வார்த்தைகள் சூடாக வெளி வந்தன.

பேச்சை மாற்ற நினைத்து அவளது மனதிலிருந்த கோபத்தைக் கிளறிவிட்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டாள் மலர்.

பக்கத்து வீட்டில் விளையாடி விட்டு வீட்டிற்கு வந்த மலரின் குழந்தைகளுக்குத் தேவியைக் கண்டதும் சந்தோஷம் சொல்ல முடியாது. தேவியின் மடியிலிருந்து செல்லம் கொஞ்சின.

அன்பான உங்களைப் பிரிந்து சென்ற எனக்குத் தண்டனை கிடைத்து விட்டது. இனி நான் 'போ' என்று பிடித்துத் தள்ளினுலும் வெளியே போகமாட்டன். தன்னை மறந்து கூறிய தேவி குழந்தை சுரேஷை முத்த மிட்டாள்.

மதிய உணவிற்கு வந்த மலரின் கணவனும் தேவியைக் கண்டு பிரமித்துவிட்டான். ஏதோ ஒரு பெருங்கதை அவளின் பின்னே இருப்பதை அறிந்திருந்தும் ஆறுதலாக மலர் கேட்கட்டும் என்று இருந்துவிட்டான்.

அன்று இரவு வெகு நேரம் தூக்கமின்றி மலர் தேவியின் கண்ணீர்க் கதையைக் கேட்டாள். அபுதாபி சென்ற ஓரிரு மாதங்களில் தேவியின் சுகபோக வாழ்க்கையில் கஷ்டங்கள் தொடங்கி விட்டன. மூன்றும் மாதச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. சம்பளப் பேச்சை தேவி எடுக்கக் கூடிய விதத்தில் எஜமானி முகம் கொடுத்து அவளோடு பேசுவதில்லை. காலை நான்கு மணிக்குத் தொடங்கும் வேலை ஒவ்வொன்ருகக் கூடிக் கூடி நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை கூட இருக்கும். அவளுக்கென்று வரும் கடிதங்கள் அவள் கைக்கு வருவதில்லை. ஓர் இயந்திரமாகப் பேசப் பறைய ஒருவரும் இன்றி மாறி, மாறி வேலை செய்த

## வீதிகள்

**ஊர்வலம் போகலாம்!**
**ஊர்திகள் ஓடலாம்!!**
**கோஷங்கள் எழுதலாம்!**
**குப்பையும் போடலாம்!!**

—முருகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிக்குப் பயித்தியமே பிடித்து விடும் போல இருந்தது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் ஒரு வித பயனுமின்றித் தான் மாடாய் உழைப்பது அவள் மனதை உறுத்தியது. ஒரு நாள் வருவது வரட்டும் என்ற துணிவுடன் படுக்கையில் இருந்து எழும்பாமல் கிடந்துவிட்டாள். தேவி வேலை செய்யாது இருந்ததால் வீட்டு வேலைகள் யாவும் போட்டது போட்டபடி கிடந்தன. அவளருகே வந்து அவளை எஜமானிக்கு தேவிக்கு ஒருவித வருத்தமுமில்லை என்பதை அறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. இருவரும் சில நிமிடங்கள் வாக்குவாதப்பட்டனர். தன்னை ஏமாற்றிவிட்டதாக தேவி கூக்குரலிட்டாள். அவளை ஒழுங்கு படுத்தியனுப்பிய ஏஜன்சிக்காரனுக்கு அவளது சம்பளம் ஒழுங்காக அனுப்பப்படுவதாக வீட்டுக்காரி கூறினாள். எது பொய் எது மெய் என்று அறியாது அவஸ்தைப்பட்ட தேவி தான் எதுவிதப்பட்டும் சொந்த ஊருக்கு வந்துவிட வேண்டும் என்று தீர்மானித்துவிட்டாள். அவள் நினைத்த நேரம் வரக்கூடிய விதத்தில் அவளது பாஸ்போட் அவள் கையில் இருக்கவில்லை? மீண்டும் தான் தங்கியிருந்த வீட்டில் வேலை செய்வதைத் தவிர அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை.


ஆனால் எஜமானியுடன் தான் வாக்குவாதப்பட்ட பின் எஜமானியும், தன்னோடு அன்பாக நடப்பதாக அவளுக்குப் பட்டது. எஜமானனோ அவளோடு முகம் கொடுத்து நடப்பதே இல்லை. இப்படி ஒரு கிழமை சென்றபின் ஒரு நாள் தம்பதிகள் கடைக்குச் சென்ற சமயம் தேவியையும் காரில் கூட்டிச் சென்றனர். வழமை போல ஒரு கிழமைக்கு வேண்டிய பொருட்களை வாங்கியவர்கள் தேவிக்கும் சில துணிமணிகள் வாங்கிக் கொடுத்தனர். தான் எதிர்த்து நியாயம் கேட்டது நன்மையாகப் போய் விட்டது என்று தேவி உள்ளூர மகிழ்ந்தாள். வீட்டிற்கு வந்ததும் காரிலிருந்த சாமான்களை இறக்கி ஒவ்வொன்றாக எடுத்துச் சென்றாள். தனக்கு விடிவு கிடைத்துவிட்டதாக நம்பிய தேவியின் மனம் என்றுமில்லாதவாறு நிறைந்திருந்தது. காரில் இருந்த இரு காட்போட் பெட்டிகளை மாடியில் வைக்குமாறு எஜமானி கட்டளையிடவே மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க பெட்டியைச் சுமந்து சென்ற தேவி திறந்திருந்த கதவினூடாக அறையில் காலெடுத்து வைத்தாள். பெட்டியை நிலத்தில் வைத்த பின் நிமிர்ந்தவள் தீயை மிதித்தவள் போல துள்ளிக் குதித்து அறையின் வெளியே பாய்ந்தாள் ஒரு கணம். அந்த ஒரு கணத்தில் தேவி அறையின் வெளியே பாயாது உள்ளே பாய்ந்திருந்தாளானால் இன்று அவளது கதை முடிந்திருக்கும். கொடுமை நிறைந்த முகத்துடன் ஒரு கையில் சவுக்குடன் நின்ற எஜமானன், மறு கையால் அறைக் கதவைச் சாத்த ஆயத்தமாக நின்றான். தான் எதிர்பாராத விதமாக தேவி மாடிப்படிகளால் பாய்ந்து வெகு வேகமாக ஓடுவாள் என்று அவன் எண்ணவேயில்லை. அவளைத் திரத்திக் கொண்டு அவன் ஓட ஒரு சில விநாடிகள் எடுத்தன. இதற்குள் தேவி வாசல் கதவைத் தாண்டித் தெருவுக்கு ஓடி விட்டாள். எங்கே ஓடுகிறேன், எதற்காக ஓடுகிறேன் என்பதை அறியாதவளாக கால்போன போக்கில் ஓடியவள் சந்தை போல மக்கள் குழுமியிருந்த ஓரிடத்தில் வந்து நின்றாள். அவள்மீது இரக்கம் கொண்ட ஒரு சிலர் அவளை பொலிஸ் நிலையத்தில் கொண்டு போய் விட்டார்கள். முதலில் ஒரு கிளாஸ் தண்ணீர் வாங்கிக் குடித்த தேவி தனது கதையைத் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் கைப் பரீஷையையும் கலந்து கூறினாள். முடிவு எதுவித சம்பளமுமின்றி அடுத்த நாளே விமானத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்டாள். எஜமானன் ஒரே பிடிவாதமாக இவளுக்கு மாதா மாதம் தான் சம்பளம் கொடுத்துவிட்டதாகக் கூறியதை எல்லோரும் நம்பினார்கள். தேவியின் கண்ணீர்க் கதை அந்த இதயங்களை உருக்கவில்லை உயிர் தப்பியதே போதும் என்று எண்ணிய தேவி நேராக விமான நிலையத்தில் இருந்து மலர் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

நேரம் நள்ளிரவைத் தாண்டிய பின்பும் தேவியோ, மலரோ தூங்கவில்லை. களைத்துப் போயிருந்த தேவி தூங்கட்டும் என்று மலர் லைற்றை அணைத்து தூங்க முயற்சித்தாள்.

அப்பப்பா என்ன பயங்கரம். பூட்டப்பட்ட அறைக்குள் தேவி கதறக் கதறக் கசையடி வாங்கியிருந்தாளானால்... ஆயிரம் மைல்களுக்கு அப்பால் என்ன நடக்கிறது. என்று யாருக்குத் தெரியும்? பணம்... பணம்... இந்தப் பணத்தை உழைக்க இப்படி அடிமை வேலை செய்வதா? கடவுளே தேவி தப்பி வந்ததே போதும். மலரும் கண்களை மூடித் தூங்க முயற்சித்தாள் அவள் முயிற்சி தோல்வியாகி மனதில் பல பயங்கரக்காட்சிகள் தோன்றி மறைந்தன.

---

## சங்கீதச் சிரிப்பு



ஒருவர்: நீங்கள் வாடகைக்கு எடுத்த வீடு எப்படி?

மற்றவர்: ஒரு சங்கீதக்காரரின் வீட்டை வாடகைக்கு எடுத்தேன். பைப்பெல்லாம் சிந்து - பைரவி பாடுகிறது!

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவை

# மல்ரி சேவிசஸ்

தொலை தொடர்புத் திணைக்கள அனுமதி பெற்று திற மையுடன் செயல்படும் எமது தொலைபேசி சுத்தப் படுத் தும் சேவையைப் பயன்படுத்தி, தொலை பேசியைத் தூசி அழுக்கு, துர்நாற்றம், நீக்கித் துப்பரவுடன், சுகாதாரத் தூய்மையுடனும், தொல்லை யற்றதாகவும் வைத்திருக்க விரும்பும் பாவனையாளர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

V

**மல்ரி சேவிசஸ்**

**37(351) மணிக்கூட்டு வீதி,**

**(வெலிங்டன் தியேட்டர் சந்தி)**

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி:- 22762




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மலரும் கணவனுமாகத் தமது காரில் தேவியை அவளது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். தேவியின் அவலக் கதையை அச்சேரி மக்களுக்குக் கூறவேண்டாம் என்று மலர் ஏற்கனவே அவளுக்குக் கட்டளையிட்டிருந்தாள். ஒன்றைப் பத்தாகக் கதைத்து அவளது வாழ்வையே நாசமாக்கிவிடக்கூடிய கட்டம் அது.

எங்கள் வீட்டுக் கதவு எப்போதும் திறந்திருக்கும் நீ விரும்பியபோது வரலாம் என்று தேவிக்குச் சொல்லிய தம்பதிகள் தமது வீட்டுக்குச் சென்று விட்டனர்.

□

"என்னப்பா? தேவியைக் கொண்டுபோய் விட்டு இரு கிழமைகளுக்கும் மேலாகிவிட்டது அவளை இந்தப் பக்கமே காணவில்லை" மனதுக்குள் இருந்த ஏக்கத்தை கணவனிடம் மெதுவாக வெளியிட்டாள் மலர்.

"அபுதாபி அனுபவம் அவளை வெளியிலை வெளிக்கிட விடுகுதில்லை. இருந்தாலும் கெட்டிக்காரி அன்றைக்கு அந்த அறைக்குள் அவள் சிக்கியிருந்தாள் என்றால் சித்திரவதைதான்......" பத்திரிகையில் படித்த சம்பவங்களோடு ஒப்பிட்டு மலரின் கணவன் சொன்னான்.

"அப்பப்பா...... நினைக்கவே என்னமோ செய்யுது. நல்ல காலம். எங்களுக்கு தெரிந்த பிள்ளை ஒன்று ஹவுஸ் மெயிடாக போய் சடலமாகத் திரும்பாமல் தப்பிட்டது......" தேவி திரும்பி வந்ததில் மலருக்கு பூரண திருப்தி.

"உனக்கு ஆயுசு நூறு......" வேகமாக உள்ளே வரும் தேவியைக் கண்டு மகிழ்ச்சியுடன் சொன்னாள் மலர்.

"நல்லகாலம் ஐயாவும் இருக்கிறார். ஐயாவைக் காணத்தான் வந்தனான்......" தேவியின் வாயிலிருந்து வார்த்தைகள் விரைவாக வெளிவந்தன.

"ஐயா இண்டைக்கு லீவு. நீ அவசரப்படாமல் கதை. என்ன ஏதும் கொம்பனிக்கு அப்பிளிக்கேசன் போடப்போறியா?" தேவியின் எண்ணத்தை தான் புரிந்துகொண்ட நிலையில் மலர் கதைத்தாள். "இல்லையம்மா கொம்பனி வேலையில்லை இது. எந்தக்கொம்பனிக்குப் போனாலும் சம்பளம் என்ன வந்திடப்போகுது? நான் என்ன பெரிசாய் ஏதும் படிச்சிருக்கிறனா? இது ஒரு அப்பிளிக்கேசன் குவெய்த்துக்கு ஹவுஸ் மெயிட் கேட்டிருக்கினம்." தேவியின் வாயிலிருந்து வார்த்தைகள் சகஜமாக வெளிவந்தன. "என்ன? உனக்கென்ன பயித்தியமா? ஒருக்காப்பட்டது போதாதா மீண்டும் இந்த வேலையா?"

"இல்லையம்மா ஐந்து விரலும் ஒரு மாதிரியா? ஒரு வீட்டிலை கொடுமை நடந்திட்டுது. எல்லாரும் அப்படித்தான் இருப்பினம் என்று நினைப்பது மடமை." அனுபவசாலி போல தேவி பேசிக்கொண்டே போனாள்.

"அப்ப நீ போகத்தான் போறியா? ஓமம்மா போகத்தான் போறன். முதலிலை வேலை கிடைக்கட்டும். எங்கடை பக்கத்துப் பிள்ளைகள் கனபேர் குவெய்த்தில் இருக்கினம். இலங்கையிலிருந்துதான் என்னத்தைக் கண்டது." எங்கையோ பார்த்துக்கொண்டு தேவி கதைத்தபோதும் அவள் வார்த்தைகளில் உறுதியிருந்தது. அவளை மாற்ற முடியாதென்பதை மலர் உணர்ந்தாள்.


அப்பிளிக்கேசனை ரைப் அடிக்க வாங்கிச் சென்ற கணவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மலர்...... தேவி முகத்தில் எதுவித சலனமுமின்றி யன்னலினூடாக வெளியுலகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ★

## நவீன பாட்டி

● என்ன பாட்டி "மிக்சிக்கு" முன்னால் இருக்கிறீர்கள்?

□ ஒன்றுமில்லை, பாக்கு வெற்றிலை அரைத்துக்கொண்டிருக்கிறேன்.

—ஜெய விஜயன்



□ என்னம்மா இது வீட்டு வாடகைப் பணம் மூன்று மாதமாக வரவில்லை எங்கே உங்கள் கணவர்?

● வெள்ளம் வீட்டுக்குள் வந்துவிட்டதால் வீட்டுக்குப் பின் பக்கமுள்ள மரத்தின் மேலே இருக்கிறார்.

—ச. ரா. பா.

## செய்திக்கு ஒரு சினிமா

வட பகுதியை நோக்கிவந்த ரயில் வெள்ளம் காரணமாக வவுனியாவில் நின்றது.

—பயணங்கள் முடிவதில்லை

□

சர்வ தேச பாஸ் போட்டுக்குப் பிணையாக கையெழுத்துப் போடும் வரை தினமும் வந்த பேர்வழியை இப்போ காண்பதே அரிதாகி விட்டது.

—மூன்றும் பிறை

□

தான் பெண் வீட்டுக்காரரின் ஊரைச் சேர்ந்தவர் என்றும் மணப் பெண்ணுக்கு உறவு என்றும் கலியாண வீட்டில் நடமாடிய பேர்வழி நகைகளுடன் மறைந்தார்.

—ஊரும் உறவும்


□

பிறப்புப் பத்திரத்தில் சுந்தரம் என்ற பெயரும் வாழ்க்கையில் சிவபாத சுந்தரம் என்றும் இரு பெயர் கொண்டவர் சத்தியக் கடதாசி கொடுக்கும்படி நேரிட்டது.

—சத்திய சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிக்சர்
சிக்சர்
சிக்சர்

அவர்
அடித்தது
எல்லாம்
சிக்சர்

அவர்
அருந்துவது

# அண்ணா கோப்பியே

அண்ணா தொழிலகம்
இணுவில்

மணவறைக் கோலம்
கண்ணிறைந்த கோலம்:
அதனை வர்ணக் கோலத்தில்
வாழ்நாள் முழுக்கப் பார்த்து
மகிழ ரஞ்சனாஸ் வீடியோ
சென்ரரை நாடுங்கள்!

**TV, DECK, வீடியோ படங்கள்**

வாடகைக்குப் பெறவும்,
வாங்கவும்

## ர ஞ் ச ணா ஸ்
## வீடியோ சென்ரர்

60, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

# சீமாட்டி...

ஒரு சேலைப் பூஞ்சோலை

* கல்யாணப் பட்டு
* காஞ்சிபுரம்
* ஆரணி
* தர்மபுரம்
* பனாரிஸ்

எல்லா வகைச் சேலைகளும்
எழில் மிகு வர்ணங்களிலும்
கிடைக்குமிடம்

## சீமாட்டி

15, நவீன சந்தை,
மின்சார வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வானில்



**கருடன்.**

1983-12-18 ஞாயிறு மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கைலாசபதி நினைவு தினக்கூட்டம் நடைபெற்றது. அ. ஜெயரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருமதி சித்திரலேகா மௌனகுரு, ரவீந்திரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

இதே தினத்தில் நல்லூர் சாதனா பாடசாலையில் யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினர் தமது ஆறாவது நூலாகத் திருவாட்டி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'சி. வை. தாமோதரம்பிள்ளை ஓர் ஆய்வு நேர்க்கு' என்னும் நூலை வெளியிட்டு வைத்தனர்.

☐ ☐

இணுவில் கலை இலக்கிய வட்டம் தனது முதலாண்டு நினைவு தினத்தின்போது இணுவிலில் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்திருந்தது. எழுத்தாளர் துரை. எங்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கவிஞர்கள் சபா. ஜெயராஜா, உ. சேரன் ஆகியோர் கவிதை பற்றியும், திருமதி சித்திரலேகா மௌனகுரு சிறுகதை பற்றியும், நாவல் என்ற தலைப்பில் நா. சுப்பிரமணிய ஐயர் அவர்களும், மல்லிகை ஆசிரியர் டொமினிச் ஜீவா, சஞ்சிகை என்ற பொருளிலும் உரையாற்றினர்.

☐ ☐

மன்னூர் வாசகர் வட்டத்தினர் கலைவாதி கலீலின் "கருவறையிலிருந்து கல்லறைக்கு" என்ற கவிதை நூலை 1984 சனவரி மாதம் வெளியிடவுள்ளனர்.

☐ ☐

பட்டிருப்பு மகா வித்தியாலய மாணவர்கள் 1983 டிசெம்பர் மாதத்தில் "உள்ளம்" என்ற இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டுள்ளார்கள்.

மீராவோடை இலக்கிய வட்டம் "கதிர்ப்பு" என்னும் கையெழுத்துப் பத்திரிகையை அண்மையில் வெளியிட்டுள்ளது.

☐ ☐

பிரிட்டனைச் சேர்ந்த 72 வயதான நாவலாசிரியர் திரு. வில்லியம் கோல்டிங் 1982 ஆம் ஆண்டிற்கான இலக்கிய நோபல் பரிசினை அண்மையில் பெற்றுக்கொண்டார். 1901 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டுவரும் இப்பரிசினை இவருடன் சேர்த்துப் பிரிட்டனைச் சேர்ந்த எழுவர் இதுவரை பெற்றிருக்கிறார்கள். 1981ஆம் ஆண்டிற்கான இலக்கிய நோபல் பரிசு பல்கேரிய நாட்டைச் சேர்ந்த ருட்யாட் கிப்ளிங் என்பவருக்கு வழங்கப்பட்டது.

திரு. வில்லியம் கோல்டிங் எழுதிய சில நாவல்கள்:

The Lord of the Flies (1954)
The Inheritors (1962)
Pincher Martin (1956)
Free Fall (1959)
Darkness Visible (1979)

## சிரி

☐ டாக்டர்... தொந்தி கரைய ஒரு மருந்து தாங்க.

● யாழ்ப்பாண வீதியில் சைக்கிள் சவாரி செய்யும்.

—அதிமதுரம்

தினமும் விடியற்காலை பார்த்தால் தனது தோட்டத்தின் மரத்திலுள்ள தேங்காய்கள் மர்மமாகக் காணுதுபோவதைக் கண்ட தோட்டச் சொந்தக்காரர் மரத்தைப்பார்த்து பின்வருமாறு சொன்னார்.

ஓ தேங்காயே! ஒரு நாள் சரி நான் வந்து பிடுங்கும் வரை மரத்தில் நீ தேங்காய். அதுதான் இப்படி உனக்குப் பெயர் வந்ததோ.

—சா. ரா. பா



ரவுடிப்பேர்வழி:
ஏண்டா டேய் நேத்துவரை என்னைக் கண்டதும் பயப்படுவாய், இன்னைக்கு எனக்கு எதிரேயே சாரத்தை மேலே தூக்கிக் கட்டிக் கொண்டு ரவுடித்தனமா வருகிறாய். எப்ப தொடங்கி துணிச்சல் வந்தது உனக்கு?

மெல்லிய ஆசாமி:
ஐயோ அண்ணாச்சி. வித்தியாசமா எடுத்துக்காதீங்க. வருகிற வழி எல்லாம் ஒரே வெள்ளம். அதுதான் இப்படி வந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு இசைக்கு
## றே டி யோ ஸ் ப தி

- பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்
- தித்திப்பான திரை இசைப்பாடல்கள்
- கர்நாடக மேதைகளின் கர்னாமிர்த கீதங்கள்.
- தனித் தேன் பாடல்கள்.

அத்தனை அமுத வெள்ளத்தையும்
அள்ளிப் பருக

### வருக வருக றேடியோஸ்பதி
### பதிவு நிலையத்திற்கு

அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவுசெய்து தருவதிலும் றேடியோ ரேப் ரெக்கோடர்கள் - தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தையும் திருத்தம் செய்வதிலும் விற்பனை செய்வதிலும் முன்னிலையில் திகழ்பவர்கள்

# றேடியோஸ்பதி

**கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

## புடவைப் பூங்கா

வனிதையர் வண்ண ஓவியமாகத் திகழ
வானவில்லின் வர்ணங்களில்
வகைவகையான தினிசுகளுக்கு

*இன்றே விஜயம் செய்யுங்கள்*

# கணேசன் ஸ்ரோர்ஸ்

# KANESAN STORES

63, 68, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

T' Phone: 7169, 8025.

## யாழ் பஸ் நிலையத்தில்

இப்போது மதுரமான இசையோடு
மக்களை கவர்ந்திழுக்கும்
மணிக்குரல் விளம்பர சேவையின்
விளம்பர அறிவிப்புகள் தினமும்
காலை முதல் இரவு வரை நடைபெறுகிறது.
உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின்

**விளம்பரங்களை சிறந்த முறையில்**
**ஒலிபரப்ப நாடுங்கள்**


## மணிக்குரல்
## விளம்பர சேவை

யாழ் பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்.

அறிவிப்பு: மணிக்குரல் மேஷர் ஷண்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mrs. டா: டாலிங்... சீற்று டேவி ராமனுடைய மிஸ்ஸிஸ் தானே?

Mr. டா. டோன் பீ சில்லி......... உங்களுக்கு டமில் இலக்கியம் தெரியாது டமயந்திதான் ராமனுடைய மிஸ்ஸிஸ்.

Mrs: ஐயாம் சொறி டார்லிங்.



நண்பர்: ஐயா! நீங்கள் கோபுர வாசல் மணியை எப்பவும் விட்டு, விட்டு துக்கமணி போல அடிக்கிறீர்களே. நன்றாக அடித்தாலென்ன?

பூசகர்: எனக்கு இந்த நிர்வாகசபை ஆறு மாதமாக சம்பளம் தரவில்லை. அதை எல்லாருக்கும் தெரியப்படுத்தத்தான்.

—ச. ரா பா'

## எலி மற்ற எலியிடம்

இந்த வீட்டுக்காரன் ஏற்கனவே கஞ்சன் இப்போ தேங்காய், தேங்காயெண்ணை விலை கூடிவிட்டதால் குத்துவிளக்குத் திரி. தேங்காய்ப் பாதி எல்லாவற்றையும் இரும்புப் பெட்டியில் பூட்டி வைக்கிறன். வா வேறு இடத்துக்குப் போவோம்.

—ச. ரா. பா'

---

நண்பர்: என் மனைவி ரேடியோ கேட்பதிலும் ஒரு நாகரிகம்.

மற்றவன்; எப்படி?

நண்பன்: குர்பானிப் பாட்டுக் கேட்கும்போது குர்பானிச் சேலை கட்டுவாள்.

—ச. ரா. பா'

---

கணவர்: என்ன 8 நாளாக சமைக்கவில்லை நான் கொழும்புக்கு போன கவலையா?

மனைவி: பக்கத்து வீட்டுக்காரன் 3 நாளாக டெக் எடுத்து படம் பார்க்கினம் என்னைக் கூப்பிடவில்லை என்ற கவலை.

—குலம்

---

தம்பி இன்ரவியூவிலை செலக் பண்ணி வேலைக்கு போராய் பிறகு என்ன கவலை?

காதலி நான் செய்யும் வேலை சரியில்லை என்று என்னை செலக் பண்ணமல் விட்டுட்டா.

---

நீங்கள் அடிபட்ட வழக்கில் வெற்றி என்றீர்கள் பிறகு ஏன் கோட்டடியில் சண்டை.

அது எங்கள் பிரக்டருக்கும் எங்களுக்கும் பீசில் ஏற்பட்ட சண்டை.

---

கொஞ்ச நாட்கள் சுவீப் டிக்கட் விற்றுச் சம்பாதித்தாயே. பிறகு ஏன் விட்டுவிட்டாய்?

இப்போ அதுக்கு கிராக்கி இல்லை. நட்டம்தான்; அதனுல் நான் க. பொ. த. வினுத் தாள்கள் விற்கிறேன். எக்கச்சக்கமான லாபம்.

—பா. கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சிரி கதை



# கிராமத்துள் புகுந்த மாயமனிதன்



—செங்கை ஆழியான்

அதிகாலையிலே, அந்தச் செய்தி கிராமத்தில் புற்றீசல் போல வேகமாகப் பரவிட்டது. அந்த செய்தியை யார் தொடக்கினார்கள் என்பதும், அச்செய்தியிலுள்ள உண்மை பொய் எவ்வளவு என்பதும் எவருக்கும் தெரியவில்லை.

பெண்கள் மிகுந்த பயத்தோடு அச்செய்தியை அக்கம் பக்கம் பார்த்து பேசிக்கொண்டனர். ஆண்கள் பலர் வியப்போடும் சிறிது கலக்கத்தோடும் பேச, சிலர் வீறுப்புடன் 'வரட்டும் பார்ப்போம்' என்றனர். குமருகளை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோருக்கு அந்தச் செய்தி, அடிவயிற்றில் புளியைக் கரைத்தது.

''உது விசர்க்கதை......'' என்றார் தாடிக்காரத் தர்மலிங்கம்.

''என்ன பேயன் மாதிரிக் கதைக்கிறாய்? பக்கத்து ஊரில ராத்திரி நடந்த விசயம். அதுக்கு முதல் நாள் அதுக்குப் பக்கத்து ஊரில நடந்தது! சிவசத்தியமா, அந்த ரெண்டு குமர்ப்பிள்ளையளையும் ஆசுபத்திரியிலே சேர்த்திருக்குதாம்... ஒண்டுக்கு இன்னும் நினைவு வரவில்லையாம்... என்று அடித்துப் பேசினார், பீடிக்கடை வைரமுத்தர்.

''இந்தக் காலத்தில உப்பிடி நடக்குமோ? என்னென்டு அவன் பூட்டியிருக்கிற வீட்டுக்கை ஒருவருக்கும் தெரியாமல் வாறான், வந்து சரியாகப் பெண்டுகளுக்குப் பக்கத்தில போய் தூக்கிப்போறான்......''

''அதுதான் சங்கதி... அவன் ஒருமந்திரவாதி... மாயாமனிதன்... நினைச்ச இடத்துக்கு நினைச்சவுடனை போவான். விசயத்தைக் கேள், தர்மலிங்கம் ராத்திரி கண்டியோ, அந்தக் கிராமத்தில் ஒரு வீட்டுக்கை அவன் புகுந்திட்டான்... கண் விழித்த பெட்டை, முன்னால் ஒருத்தன் நிக்கிறதைக்கண்டு கத்தியிருக்குது. ஆக்கள் துரத்தியிருக்கினம்! ஒரு பொடியன் பாய்ஞ்சு பிடிச்சிருக்கிறான் அவன் அப்படியே வழுக்கிக் கொண்டு ஓடி விட்டான்! அவனைக் கட்டிப்பிடிக்கவே முடியவில்லையாம். வழுக்கு மரம் மாதிரி, பிடிக்கவே முடியவில்லையாம்...''

''பேந்து?''

''ஆக்கள் பனைவடலி, வயல் வெளி எல்லாம் துரத்தியிருக்கினம். அவன் இருந்தாற்போல, குரங்காக மாறி மரத்திலதாவி, இருட்டுக்கை மறைஞ்சிட்டான்...''

''குரங்காக மாறியோ?''

''ஓமெண்டுறன்...''

அடுத்த நாள் பத்திரிகை ஒன்றில், பெட்டி கட்டி, கொட்டை எழுத்தில், இச் செய்தி பெரிதாகப் பிரசுரமாகியிருந்தது. ''பெண்கள் பயப்பிராந்தி'' ''மாயமனிதனின் திருவிளையாடல். குரங்காக மாறிய மாயாமனிதன்'' என்றதலைப்புகளில் அப்பத்திரிகை மூன்று நாட்கள் அச்செய்தியைப் பற்றி பந்தி பந்தியாக வெளியிட்டது.

அக்கிராமத்தை இச்செய்தி மிகவும் கலக்கிவிட்டது; இளைஞர்களைக் கொண்ட காவல் படை ஒன்றும் அமைக்கப்பட்டது. மூன்றும் நாள் மாயமனிதன் அக்கிராமத்திற்குள் புகுந்து விட்டதாகச் செய்தி பரவியது.

விடியல் வேளையில் வடலிக்குள் சென்ற பீடிக்கடை வைரமுத்தர் தான் அவனைக்கண்டார். குந்தும்போது தூரத்தில் ஒரு மனிதன் வருவதைக் கண்டார். எழுந்தபோது, பெரியதொரு கடுவன் குரங்கு அவர் முன்னுள்ள மரத்தில் தாவி ஏறி ஓடியதைக் கண்டார்.

மாயமனிதன் குரங்காக ஊருக்குள் புகுந்துவிட்ட பரபரப்பான செய்தியை வைரமுத்தர் ஊரெங்கும் அறிவித்தார்.


கொழும்பு — யாழ்ப்பாணம்
படுக்கை இருக்கையிலிருந்து குளிரூட்டப்பட்ட சூழ்நிலையில் குதூகலமாகப் பிரயாணம் செய்வதற்கு

கல்யாணி எக்ஸ்பிறஸ்

இன்றே பதிவு செய்யுங்கள்
73, கஸ்தூரியார் வீதி, : : யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயப்பிராந்தி ஊரைப் பயங்கரமாகக் கவ்வியது. அன்று முழுவதும் ஊரெங்கும் இதே கதைதான். மாலை கவியக் கவிய ஒவ்வொரு வீடுகளிலும் ஏக்கமும் பயமும் குடிகொண்டன.

தாடிக்காரத் தர்மலிங்கத்தாருக்கு நான்கு மருமகள்; மிகவும் பயந்து போனார். அலவாங்கு ஒன்றை எடுத்து பக்கத்தில் வைத்துக்கொண்டார்.

''பிள்ளையள்... ஒருத்தரும் ராவைக்கு படுக்கேக்க பாவாடை சட்டை போடாதையுங்கோ. அண்ணன்மாற்றை சாறங்களைக் கட்டி, சேர்ட்டுக்களைப் போட்டுக்கொண்டு படுங்கோ... என்று கட்டளையிட்டார். அதன் பிறகு அவருக்கு ஒருதிருப்தி.

நிச்சயமாக இந்த வீட்டில் பெண்பிள்ளைகள் இல்லையென்று மாயமனிதன் ஏமாந்துபோவான்.

''வந்து பார்ப்போம் எல்லாம் பொடியள் என்று திரும்பிவிடுவார்...'' என்று கூறிக்கொண்டார்.

சங்கக்கடை சிங்காரவேலருக்கு ஒரு பையனும் ஒரு வயது வந்த பெண்ணும் இருந்தனர். அவரும் மனைவியும் பகல் பகலாக யோசித்துப் பார்த்தனர். ஒரு வழி தென்பட்டது.

மகனை, மகள் படுக்கிற அறையில் படுக்கச் சொன்னார். மகளை மகன் படுக்கிற ஹோலில் படுக்கச் சொன்னார்.

''சோக்கான யோசினை... உவர் ஏமாந்துபோவார், வடுவா...''

நடுராத்திரியில் சிங்காரவேலரின் மகன் வீரிட்டுக் கத்தினான்.

''என்ன, என்ன?... கொடுவாக்கத்தியை எடுத்துக்கொண்டு சிங்காரவேலர் பாய்ந்தார்.

''ஆரோ... எனக்கு முன்னாலை நின்றதுபோல இருந்தது... பயந்து கத்திவிட்டன்'' என்றான், பையன், ''தூ... தூ...'' என்று சொல்லி நெஞ்சில தட்டிவிட்டு, சிங்காரவேலர் காவல் இருந்தார்.

இன்னும் சில வீடுகளில் பெண்கள் றவுசர்களை மாட்டிக்கொண்டு படுத்தனர்; பையன்கள் கவுன்களைப் போட்டுக்கொண்டு உறங்கினர்.

கனகசபை மாஸ்டருக்கு நித்திரையே வரவில்லை நாற்சாரம் வீடு. ஒருபுறத்திண்ணையில் அவருடைய எட்டுப் பிள்ளைகளும் வரிசையாகத் தூக்கிக்கொண்டிருந்தன. அவர்களுக்கு அருகில் அவரது மனைவி சரஸ்வதியும் இழுத்து மூடிக்கொண்டு படுத்திருந்தாள். வாங்கில் படுத்திருந்த ஆசிரியருக்கு நித்திரை வரமறுத்தது.

மாயமனிதன் பயம் ஒரு பக்கம். மனைவி, பிள்ளைகளுடன் போய்ப்படுத்தது இன்னொருபக்கம். மனைவியும் மாயாமனிதனின் பயத்தில் நித்திரை வராமல் கிடந்தாள்.

இருதாற்போல யாரோ அவளுடைய காலைச் சுரண்டியது போல .....

''ஐயோ... ஆராவது வாருங்களேன், என்ரை ஐயோ......'' என்று பெருங்குரலில் மாஸ்ரரின் மனைவி கத்த...

''ஏன்ரி கத்திறாய், அறுவாளே? அது நானடி...'' என்று கனகசபை மாஸ்டர் தவிக்க...

சத்தத்தில் விழித்துக்கொண்ட பிள்ளைகள் எட்டும், என்ன நடந்தது ஏது நடந்தது' என்பது அறியாமல் அலற...

ஒழுங்கையால் இரவுக்காவலுக்குப் போன பத்துப்பன்னிரண்டு பொடியன்கள் படபடவென்று உள்ளே பாய்ந்து, திகைத்துப் போய் வியர்த்து நின்ற மாஸ்ரரை இருட்டில் யார் என்று தெரியாமல் வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார்கள்.

மில்காரச் சுப்பிரமணியத்தார் வீட்டில் இன்னொரு சம்பவமும் நடந்தது. அயல்களில் உள்ள பெண்கள் எல்லாரும் அவர் வீட்டு ஹோலில் படுத்திருந்தார்கள் ஆண்கள் எல்லோரும் தடி, பொல்லு, அலவாங்கு, கத்தி, கோடரி... முதலான ஆயுதங்களுடன் வீட்டைச் சுற்றிக் காவல் இருந்தார்கள்.

அரைச்சந்திர வெளிச்சம் நேரம் நள்ளிரவைக் கடந்துவிட்டது. காவலுக்கு இருந்தவர்கள் அப்படி அப்படியே தம்மை மறந்து உலகத்தில் ஆழ்ந்து கொண்டிருந்த வேளையில்......

வேலிவரிச்சு மட்டைகள் படபடவென முறியும் சத்தம் எழுந்தது. சுப்பிரமணியத்தார் விழித்துப்பார்த்தார். அவரைப்போல பலரும் பார்த்தார்கள்.

வெள்ளைவேளேரென்று
ஒரு உருவம். நல்ல உயரம்...
வீற்றிருந்தது.

பயத்தோடு எல்லோரும் பாய்ந்தார்கள். அப்படி ஒரு பாய்ச்சல் அந்த உருவம் பாய்ந்து ஓடத் தொடங்கியது. அவர்களும் விடவில்லை. துரத்தினார்கள். அந்த உருவம் வயலுக்குள் இறங்கியதும்தான் தெரிந்தது.

அது தணிகாசலத்தின் நாம்பன் மாடு என்று!

ஊரெல்லாம் இப்படி அமளிப்பட்ட, பீடிக்கடை வைரமுத்தர் மட்டும் நிம்மதியாக மூன்று நான்கு இரவுகள் நித்திரை கொண்டார். ஊர் எல்லாம் கொள்ளை, களவுகள்! தான் தேடி வைத்திருப்பவற்றை யாராவது கள்ளர் அடித்துக்கொண்டு போய்விடுவார்கள் என்ற பயத்தில் பல நாட்களாக யோசித்து, இப்படி புரளியைக் கிளப்பி விட்டிருந்தார்.

இரவெல்லாம் ஊர் விழித்திருக்க, அவர் நிம்மதியாக நித்திரை செய்தார். நான்காம் நாள் இருதாற்போல உறக்கம் கலைந்தது. மெதுவாக எழுந்து யன்னலால் பார்த்தார்.

வேலியைத்தாண்டி ஒரு உருவம் குதித்தது.

'மாயமனிதனோ?......'

'அப்படியிருக்காது: மாயமனிதனேயில்லை. நான் கட்டிவிட்ட புரளி அது'

'கள்ளனோ?'

அவரால் எதுவும் பேசமுடியவில்லை. நாக்கு பயத்தால் மேலண்ணத்தோடு ஒட்டிக்கொண்டது. பயத்துடன் பார்த்தார். அந்த உருவம் மனிதனாக இருப்பதும்... சிறிது நடந்ததும் குரங்காக மாறுவதும்... பிறகு மனிதனாகி... குரங்காகி...... ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைத் தராசு



• கலைவாதி கலீல்

தமிழ்ப் பட வரலாற்றிலும் பல புதுமைகள் புகுத்தப்பட்டுள்ளன. ஆனால் அன்று "நத்தை வேகம், ஆமை வேகம்" என்று சொல்லக்கூடிய அளவுக்கே!

இசைப் பாங்கான படங்கள் வசனப்படங்களாக மாற்றப்பட்டு பின்னர் படிப்படியாக கட்டிய சர்தனமாகவே மாற்றியமைக்கப்பட்டது. குறைந்த வசனங்கள், கூடிய காட்சியமைப்புக்கள். புதிய உத்திகள், தொழில் நுட்ப ஆழுமைகள்' படத்தில் விறுவிறுப்பும் வேகமும், வித்தியாசமான சமூகக் கதைகள் ஆதியன தமிழ்ப்பட உலகத்தையும் ஆக்ரமித்தன. ரசிகர்களின் மனோ நிலைக்கேற்றவாறு திரைப்படங்களின் வரையறைகளும் அமைப்பும் மாறுதலடைந்தன.

இசைப்படங்களின் ஆதிக்கத்திலிருந்து தமிழ்த் திரைப்படங்களை வசனப்பட உலகுக்குள் அழைத்து வந்தவர்கள் அண்ணாத்துரை, கருணாநிதி, இளங்கோவன் போன்றோர்களே! இவர்களுக்காகவே வேலைக்காரி, சொர்க்கவாசல், பராசக்தி, மனோகரா, பணம், திரும்பிப்பார் போன்ற படங்கள் வெற்றிகரமாக ஓடவாரம்பித்தன.


பின்னர் ஸ்ரீதர் படவுலகில் சில புதுமைகளைப் புகுத்தினார். மக்கள் ரசிக்கவாரம்பித்தனர். அவரைத் தொடர்ந்து கே. பாலச்சந்தர், பாரதிராஜா என்று பலர்... இவ்வாறே தமிழ்ச் சினிமாவும் பல வித மாற்றங்களைக் கண்டது.

பாட்டும் நடனமும் இல்லாமல் எடுக்கப்பட்ட "அந்த நாள்" படத்தைப்போல், ஸ்ரீதர் நெறிப்படுத்திய "நெஞ்சிலோர் ஆலய"மும் 27 நாட்களில் எடுக்கப்பட்ட படம் என்ற சாதனைப் பெருமையைப்பெறுகிறது. இவ்வாறு பல...

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒருகாலத்தில் ஒரு நடிகருக்கு "டப்பிங்" குரல் கொடுத்தார் என்றால் நம்ப மறுப்பார்கள், தெலுங்குத் திரையுலகின் புகழ் மிக்க நடிகராகத் திகழ்ந்த முக்காமாலா என்பவருக்கே சிவாஜி கணேசன் பின்னணிக்குரல் (பேச்சு) கொடுத்திருந்தார். அதெல்லாம் பழைய கதை.

"தாயைப்போல பிள்ளை நூலைப்போல சீலை" என்ற படத்தில் வருகின்ற "பொற்கைப் பாண்டியன்" என்ற சிறு நாடகத்தில் மட்டும் தோன்றி நடித்திருக்கிறார் சிவாஜி, அந்தக் காலத்தின் பிரபலமான "ஹீரோ" எம். கே. ராதா நாயகனாக நடித்த "மர்ம வீரன்" என்ற படத்தில் சில புதுமைகள் புகுத்தப்பட்டன. இந்தப் படத்திலேயே "எலக்ட்ரிக் கத்திச் சண்டை" (அதாவது கத்தியில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு சண்டையிட்டமை) புகுத்தப்பட்டது. அதனைப்புகுத்தியவர் "ஸ்டண்ட் சோமு" ஆவார். அதில் வரும் ஒரு பாடல் காட்சியில் ஹீரோ எம். கே. ராதாவுடன் தென்னகத் திரைவானின் முடி சூடா மன்னர்கள் நால்வர் ஒரு சிலநிமிடங்கள் தோன்றி மறைகிறார்கள். ஆமாம் வெறும் சிப்பாய்களாக... சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், என். டி. ஆர், ஏ. நாகேஸ்வரராவ் ஆகியோரே இந்த நால்வரும் (அம்மாடி... இது இலேசான காரியமா?) இந்த நால்வரும் ஒருபாடலில் வரும் இரண்டு வரிகளுக்காக சும்மா வாயை ஆட்டிவிட்டு. வாளை நீட்டிவிட்டுப் போகிறார்கள். தியேட்டரே கரகோசத்தாலும் "விசில்" ஒலியாலும் அதிர்கிறது.

சிவாஜியும் எம். ஜி. யாரும் இணைந்து "கூண்டுக்கிளி" என்றொரு படத்தில் நடித்தார்கள்.



முன்பு ஞானப்பால் ஊட்டி நல்ல தமிழ்ப் பாட்டை நாம் கேட்டோம். பிறகு டப்பாவில் அடைக்கப்பட்ட பாலை உண்டதால் டப்பாப் பாட்டைக் கேட்டோம். இனி "பக்கட்" பால் சாப்பிடத் தொடங்கிவிட்டதால் "பக்கட்" பால் பாட்டு கேட்கப் போகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிக்க வைத்தார்கள்)இவையெல்லாம் தற்போது நடக்கக்கூடியதா?

இன்றைய நடிகர்கள் நூறு, இருநூறு, முன்னூறு என்று படங்களில் நடித்துத்தான் நிலையான ஒரு இடத்தையும் பெரும் புகழையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்த நாட்களில் சினிமாவுலகின் நிஜ மன்னனாகவே திகழ்ந்த தியாகராஜ பாகவதர் (அவரது நடையை ''ராஜ நடை'' என்று சொல்வர்) பெரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தார் என்றால்... அவர் எத்தனை படங்களில் நடித்திருக்கிறார் என்று அறிந்தால் பலர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேபோவார்கள்...... ஒரு ஐம்பது...... இல்லை இல்லை, வெறும் பன்னிரண்டு படங்களிலேயே அவர் நடித்திருக்கிறார்.

ஜெமினி, பட்சிராஜா, ஜுபிடர், ஏ. எல். எஸ். (மாடர்ன் தியேட்டர்ஸ் கூட) போன்ற புகழ்மிக்க பட நிறுவனங்களின் ''அட்ரஸ்''கள் இப்போது தேடப்படுகின்றன. பட்சிராஜாவின் புரட்சிப்படைப்பான ''மலைக்கள்ளன்'' தான் ஒன்பது மொழியில் தயாரான தமிழ்ப் படமாகும். (சிங்களத்திலும் கூட) தமிழில் எம். ஜீயார், ஹிந்தியில் திலிப், சிங்களத்தில் பிரேம் ஜயந்த்.

ஆமாம் இவ்வளவு முஸ்தீபுகளும் பழைய இரை மீட்டலும் எதற்கென்றால் .

இன்று ஒரு தமிழ்ப் படத்தைப் பற்றி எழுதப்போகிறேன். அதற்காகவேதான்! ஆமாம் தமிழ்ப் படத்தைப்பற்றித்தான். ''சலங்கைஒலி''யைப்பற்றி, ஆனால் அதுகூட முழுமையான தமிழ்ப் படமல்ல...

தெலுங்குத் திரையுலகின் பெருமைக்குரியவர் டைரக்டர் ஐ. விஸ்வநாத். அவர் நெறிப்படுத்திய மூன்று படங்களைப் பார்க்க முடிந்தது. முதலில் வெளியானது ''சிரிக்கும் சலங்கை'' இடையில் வந்தது ''சங்கராபரணம்'' இறுதியாகப் பார்த்தது ''சலங்கை ஒலி.''

''சிரிக்கும் சலங்கை'' இடைவேளைக்கு முன்னர் ஓரளவு சிறப்பாக இருந்தாலும் பின்னர் மசாலா! ஆயினும் மனதை உருக்கும் பல காட்சிகள் உண்டு. உதாரணமாக நாட்டியச் சலங்கையைத் தூக்கி எறிந்து விட்டு அது ஆகாயத்திலிருந்து கீழ் நோக்கி வரும்போது அதனை அப்படியே நிறுத்தி டைட்டில் எழுத்தைக் காட்டுவதே அற்புதமாக இருந்தது.

சங்கராபரணம், திரைப்படவுலகின் 'வரலாற்றையே திசை திருப்பக் கூடிய ஒரு அற்புதமான திரைப்படமாகும். மறக்க முடியாத பத்துப் பாடல்களை வரிசைப்படுத்தினர். அதில் ஒன்றாக இதனையும் எந்தவித ஐயத்துக்குமிடமின்றிச் சேர்த்துக் கொள்ளலாம், அதில் சங்கர சாஸ்திரியாக வரும் ஒரு சோமயாஜுலுவையும் படம் முடியும் வரை வாயையே திறக்காமல் ஒரு வார்த்தைகூட பேசாமல் வெறும் கண்களால் மட்டுமே நடிக்கும் (கண்களா அவை) மஞ்சு பார்கவியையும் எவ்வளவு தூரம்தான் பாராட்டுவது. (இங்கே வார்த்தைப் பஞ்சத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.) படத்தின் ஒவ்வொரு பிரேமும் அற்புதமானவை. திரை இசைத் திலகம் கே. வி. மகாதேவன், எஸ். பி, பாலசுப்பிரமணியம், வாணி ஜெயராம் ஆகியோர் இந்தப் படத்திற்காகவே அகில இந்தியப் பரிசுகள் பெற்றார்கள் என்றால் படத்தின் இசையைப் பற்றி அதிகம் சொல்வானேன். படத்தின் டைரக்ஷன் மிகப் பிரமாதம் (இந்தப் படத்தைத்தான் பத்திரிகையொன்று ''படம் தோல்வி! பாடல் வெற்றி!'' என்று எழுதியிருந்தது. வெற்றி தோல்விகளை இவர்கள் என்ன அடிப்படையில் தான் தீர்மாணிக்கிறார்களோ பராபரமே!) சங்கராபரணம் முழுக்க முழுக்க கலைத்துவமான படமாகும். படத்தில் சில குறைகளும் இல்லாமலில்லை. படத்தின் நிறைவு, குறைகளை மறைத்து விட்டன். உண்மை அதுதான்!

இனி விடயந்துக்கு வருகிறேன். ''ஓகோ'' என்று பெரிது படுத்தப்பட்ட ''சலங்கை ஒலி'' படத்தைப் பார்த்தேன், படத்தைப் பார்க்கும் முன் ''சங்கராபரணம்'' விஸ்வநாத்தின் படம் பார்க்கிறோம் என்ற உணர்வுடனேயே திரை மீது கண்களைப் பதிக்கிறேன்.

அந்தச் ''சலங்கை ஒலி''யின் நாதத்தை அடுத்த இதழில் பகிர்ந்து கொள்வோமே!

---



☐ மகளுக்குச் சீதனம் கொடுத்துக் கலயாணம் பண்ணி வைத்தாயே பணம் எப்படிக் கிடைத்தது?

● சீதனக் கொடுமையை மையமாக வைத்து ஒரு நாவல் வெளியிட்டேன் நல்ல விற்பனை. அந்தப்பணத்தைச் சீதனமாகக் கொடுத்து மாப்பிள்ளை எடுத்தேன்.

— அதிமதுரம் —

---

டாக்டர்: இந்தக் காயம் எப்படி ஏற்பட்டது?

ஒருவர்: சமாதான சபை வேணுமா இல்லையா என்ற விவாதத்தில் ஏற்பட்ட காயம்.


—குலம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிகதை



# கல்யாண ஊர்வலம் வரும்

ஸ்ரீ யோஜனு

பொழுதுவிடிந்தாலோ ரமணனுக்கு திருமணம் ஆனல் அவனது முகத்தில் மாப்பிள்ளைக்குரிய பூரண மகிழ்ச்சி இருப்பதாக தெரியவில்லை. ஏதோ ஒரு குறை அவனை வாட்டுவது தெட்டத் தெளிவாக புலனாகிறது. ஆனல் அவனது ஆருயிர் தோழன் ரவியோ மாப்பிள்ளைக்குரிய மகிழ்ச்சியுடன் திருமண அலங்கார வேலைகளை கவனித்த வண்ணம் இருந்தான். ரமணன் அவனை ஏக்கத்துடன் பார்த்து "மச்சான் நாளை விடியாது இருந்தாலே பரவாயில்லை போல் இருக்குது" என்றான்.

"டேய் உனக்கென்னடா விசரா நான் அன்று தொட்டு சிரித்திரன் ரசிகன். நீ கவலைப்படாதை நாளை நடக்கப்போவதை இருந்துபாரன்." "என்னவோ நீ எப்பவுமே எதையுமே சீரியசாக எடுப்பதில்லை அது உனக்குத்தான் ஏலுமடா என்னாலை முடியாது"

"டேக் இட் ஈசி அவில் டூ மை பாட் பெஸ்ட்"

ரமணனுக்கோ பெரியதோர் பெருமூச்சுவெளிப்பட்டது அவனது மனது 2 வருடங்களுக்கு முன் நடந்ததை அசை போட்டது.

★ ★

அவன் தனது ஆருயிர் நண்பனான ரவியுடன் குவைத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் வேளை அவன் பொறியியலாளனாக உயர்வதற்கு ஊன்று கோலாய் இருந்தவனே இந்த ரவிதான். அவர்களுடன் அறையில் புதிய நண்பனாக அரவிந்தன் என்பவனும் வேலை பார்த்து வந்தான். இருவரும் மணமானவர்கள் என்பதால் அவர்களது கேலிப் பேச்சுகளுக்கு உள்ளாபவன் ரமணனே.

இவ்வாறுதான் ஒரு நாள் வீ. டி, யோவில் ஓர் இந்திய திருமண ஊர்வலம் நடந்தது. அதில் கலந்த வாத்திய கோஷ்டி சிறப்பும் அமைப்பும் இல்லை என ரவியின் வாதம் ஆனல் இசையில் ஊறிய அரவிந்தன் அது அமைப்பு, அழகு உள்ளது என வாதித்தான். விவாதம் பந்தய நிலையை அடைந்து விட்டது. ரவி உடனே "ரமணனின் திருமண ஊர்வலத்துக்கு நான்தான் வாத்திய கோஷ்டி செய்வது அப்படி தவறின் தனது பொறியியலாளர் பதவியை துறந்து விடுவேன் என்று சபதம் செய்தான்.

இரண்டு வருடத்திற்கு முன்பு நடைபெற்றது இலங்கையில் வந்து அதி முற்றிலும் மறந்த நிலை, ஆனல்ரமணனின் திருமணப் பேச்சு ஆரம்பமானதும் ரவியே மிக மகிழ்வுடன் அரவிந்தனுக்கு பந்தய விடயத்தை நினைவு படுத்தினன்.

ரமணனே இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை. இருவரும் மிக வேண்டிய நண்பர் அதிலும் ரவி - அப்பப்பா - அவனது உயிர் எனலாம்.

இரு கிழமைக்கு முன் வந்த அரவிந்தன் இரகசியமாக விசாரித்தான். "டேய் ரமணு - ரவி ஏதும் நாதஸ்வரப் பயிற்சி பெறுகிறானு அவனாகவே பந்தயத்தை மீண்டும் நினைவிற்கு கொணர்ந்துள்ளான்."


அரவிந்தனுக்கு ரவியில் உயிர் அத்துடன் அவனது அசட்டு போக்கையிலையும் உணராதவனில்லை எப்பவாவது ",டேய் பயிற்சிசெய்கிறயா" என்றல் ரவியிடமிருந்து வரும் பதில் "நான் சிரித்திரன் பழைய ரசிகன்" என்பது எமக்கோ ஒரே குழப்பம், சிரித்திரனுக்கும் அதற்கும் என்ன சம்பந்தமென்பது.

ஆயிற்று திருமண ஊர்வலம் ஆரம்பமாக உள்ளது நண்பர் கூழாமோ ரவியை ஆதங்கத்துடன் பார்க்கிறர்கள். மணமக்களின் பெற்றோரோ "ஏன் ஊர்வல ஏற்பாடு செய்யவில்லையா" என ஆரவாரிக்கிறர்கள். ரவியோ அமைதியாக சென்று புதிய Sony பெட்டியில் இருந்து டேப் பெட்டியை அமைதியாக எடுத்துஅதில் அமைதியாக ஏதோ ஒரு கசட்டை செருகி on பண்ணியவன் அதனை தனது தலையில் வைத்து மணமக்கள் அருகே வந்து "ம் ஊர்வலம் ஆரம்பமாகட்டும்" என ஓடர் செய்தான். பத்மநாதனின் நாதஸ்வரம் காற்றில் மிதந்தது.

முதல் எல்லோர் முகத்திலும் ஒரே கேள்விக்குறி, விளங்காப்புதிர் உடனே அரவிந்தன் ஓடிவந்து, ரவியை மகிழ்ச்சியுடன் தழுவி "டேய் சொன்னதை சாதித்திட்டாய்வெற்றிவெற்றி" எனக் கத்த ஊர்வலத்தில் வந்தவர்கள் திகைத்து நின்று பின் விசயத்தை கேட்டதும், விழுந்து விழுந்து சிரித்தனர் ரமணனுக்கு அப்போதுதான் ரவி தான் சிரித்திரன் ரசிகன் எனும் சூழ்சுமம் விளங்கியது. திருமண ஊர்வலத்தில் ரமணன் மாப்பிள்ளைக்குரிய பாங்கில் நின்றது உங்களுக்கு சொல்லி தெரிவதற்கில்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியத் தேன்

• அகளங்கன்

கவியரசர் கண்ணதாசன் பச்சை விளக்கு என்ற படத்திற்காக ஒரு பாடல் எழுதியிருந்தார். அந்தப் பாடல் ஒரு அண்ணன் தனது தங்கையின் எதிர்காலத்தைக் கற்பனை பண்ணுவதாக அமைந்திருந்தது. '' ஒளி மயமான எதிர்காலம் - என், உள்ளத்தில் தெரிகிறது '' என்பதுதான் அந்தப்பாடல். அந்தப் பாடலிலே ஒரு வர்ணனை, '' குங்குமச் சிலையே குடும்பத்து விளக்கே..." என்று வருகிறது '' சந்தனச் சிலை " என்று பெண்ணை வர்ணிப்பது புதுமையானதல்ல ஏனெனில் சந்தன மரத்தினால் பெண்போன்ற ஒரு பதுமையைச் செய்து விடலாம். ஆனால் குங்குமத்தால் எப்படிச் சிலைசெய்வது. சிந்திக்கவேண்டியதுதான். இருந்தாலும் குங்குமத்தைக் குழைத்துச் செய்த சிலைபோல ஒரு பெண் இருந்தால் எப்படி இருக்கும். பெண்ணை வர்ணிப்பதற்கு ஒரே சொல்லாக '' குங்குமச் சிலையே '' என்று கூறுவதை விட உயர்ந்த வர்ணனை இருக்கவே முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது.

மகாகவி பாரதியின் பாப்பாப் பாட்டில் ஒரு வரி'
''பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப், பசு மிக நல்லதடி பாப்பா;"


என வருகிறது இங்கு மழை பொழிவது போல பசு பாலைப் பொழிந்து தரும் என்ற கருத்து மகாகவியின் கருத்து. இதனை இப்படி யோசித்துப் பார்த்தேன். பாலைப் பொழிந்து பாப்பாவைச் செய்தால் எப்படி இருக்கும். கல்லைப் பொழிந்து சிலை செய்வதைப் போல, பாலைப் பொழிந்து குழந்தையைச் செய்தால் எப்படி இருக்கும் அழகு. சிந்தனையை குங்குமச்சிலையோடு ஒப்பிட்டுப் பாருங்களேன். ஆகா ..... நினைக்கவே இனிமையாக இருக்கின்றதல்லவா.

கவிஞர் '' வாலி " கற்பகம் படத்தில் ஒரு தாலாட்டுப் பாடலில் இப்படி ஒரு கற்பனையைக் கலந்திருந்தார். '' மூன்றாம் பிறையில் தொட்டில் கட்டி ". என வருகிறது. அந்தப் பாடல் வரி. மூன்றாம் பிறையையும் அதில் தொட்டில் கட்டிக் குழந்தையை அதில் போட்டு ஆட்டுவதையும் நினைத்தல் இனிமையாக இல்லையா.

'' சின்னச் சின்ன மூக்குத்தியாம் " என்று தொடங்கும் ஒரு பழைய பாடலை பலர் ரசித்திருப்பீர்கள். இப் பாடலை கே.சீ.எஸ். அருணாசலம் இயற்றியிருந்தார். அப் பாடலிலே ஒரு பெண்ணை அழகாக வர்ணிக்கிறார் கவிஞர், '' கழுத்தைச் சுற்றி ஓர் **அட்டியலாம்** - உந்தன், கட்டழகே ஒரு **பட்டியலாம்,** என ஒரு அடி வருகிறது. விலைப் பட்டியல் பார்த்திருக்கிறோம். ஆனால் அழகுக்கு பட்டியல் போட்டதை யாரும் பார்த்ததில்லை., அதிலும் அட்டியலாம் என்ற சொல்லோடு பின் சீர் எதுகையாக வரும் பட்டியலாம் என்ற சொல் எவ்வளவு அழகாக ஒத்திசைக்கின்றது.

கவிஞர்களுக்கே உரித்தான கற்பனைகள் கவிவரிகள், அல்லது தனிச் சொற்களில் கூட வெகு ஜோராக அமைந்து கவிஞனை பாராட்ட வைப்பதோடு ரசிகர்களுக்கு எவ்வளவு மனநிறைவையும் கொடுத்துவிடுகிறது பாருங்கள்.

---



## சிரிகதை

மேலே தரப்பட்டிருக்கும் படத்திற்கு ஒரு '' சிரி கதை '' எழுதி அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்படும் தரமான கதைக்கு ஆ. க. செல்வநாயகம் அவர்கள் ரூபா 25/- பரிசாக வழங்குகிறார்.

— ஆசிரியர்

---

ஜனவரி 23ம் திகதியிற் பிறக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் இந்தியாவில் நேதாஜி என்ற பெயரைச் சூட்டுகிறார்கள். காரணம்? அது நேதாஜியின் பிறந்த தினம்.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சிரிப்பு

ஒருவர்: அவன் ராமேசுக்கு நான் எவ்வளவு உதவி செய்தன் என்னுடைய பிறந்த தினத்துக்கு வந்து வாழ்த்து தெரிவித்தானா கழுதை!

மற்றவர்: ஐயோ பாவம் அவன் கார் விபத்தில் அடி பட்டு ஒரு மாதமாக உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறான்.



பெண்ணின் தந்தை:

என்ன மாப்பிள்ளையின் விலையைத் திடீரெனக் கூட்டிவிட்டீங்களே?

தரகர்:

மா விலை கூடிவிட்டுதே!

- ● என்ன சட்டம்பியார்... துறவிக்கோலம்!
- ☐ மனைவி என்னை "டெனிம்" காற்சட்டை போடச் சொன்னாள்... துறவியாயிட்டேன்.


சாரதி: தம்பி இந்த காரை கொஞ்சம் தள்ளித் தாங்க!


ஒருவர்: வீதி திருத்தின பின்பு தள்ளித் தரலாம்.

- ☐ கோயில் கும்பிட வரக் காணமே உம்மை?
- ● இப்போ அதிபாகளைக் கும்பிடுகிறேன். பிள்ளைகளின் பள்ளி அட்மிஷனுக்காக!

## மெயிலவாகனத்தார்

வீட்டில் இருந்தால் கள்வர்.
ரோட்டில் போனால் மேடுபள்ளம்.
ரோட்டில் தாருமில்லை.
நாட்டில் தார்மீகமுமில்லை.





- ☐ என்ன சோகமாயிருக்கிறீங்க?
- ● 24 மணித்தியாலமும் மனைவி வீடியோ பாக்கிறாள்... என் முகத்தை மறந்துவிட்டாள்.

பேச்சாளன் மேடையில்:


"எல்லாச் செல்வத்திலும் பெரும் செல்வம் கல்விச் செல்வம்.

சபையில் ஒருவர்:

"நிறுத்தும்... பிள்ளைக்குப் பள்ளியில் அட்மிசன் மறுக்கிறாங்க... கல்விச் செல்வமாம்.



- ● ராஜு உன்னைக் காதலிக்கிறானாமே ..!
- ☐ நான் உள்ளூரில் வேலை செய்பவர்களை கட்டியிட்டு கஷ்டப்பட விரும்பவில்லை.



சின்னக்குட்டி: களை பிடுங்க ஆள் தேடிக் களைச்சுப் போனேன். களை பிடுங்க ஊரில் ஒருத்தரும் இல்லை.

தம்பர்: கள் இறக்க யந்திரம் கண்டு பிடிச்ச மாதிரி களை புடுங்கவும் கண்டு பிடிச்சால் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம் பிறென்ஸ் லிமிட்.

463, காலி வீதி.
கொழும்பு-3.
போன்: 589190

82- கன்றுதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

## மக்கள் விரும்பும் பிறென்ஸ் கொம்பனி

வீட்டுப் பொருட்கள் கடன் கொடுப்பனவுகாரர்,
வெளிநாட்டுஏற்றுமதி இறக்குமதியாளர்,
பட விநியோகஸ்த்தர்கள்,
உல்லாச பஸ் சேவையாளர்,
காணி நிலை முதலீட்டாளர்கள்,
கட்டிட கொந்தராத்துக்காரர்,
புடவை விநியோகஸ்தர்,
அனைவருக்கும் சேவை செய்கிறது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவும்
வளர்ந்து வருவது

## ஹோம் பிறென்ஸ் லிமிட்டட்

கிளை: இல. 82, கன்றுதிட்டி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

தலைமையகம்:
ஹோம் பிறென்ஸ் லிமிட்டெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலுப்பெண்ணை
## பயன்படுத்துவோம்
## இருதய நோய்
## தவிர்ப்போம்

எமது முன்னையோர் ஆரோக்கிய வாழ்வு வாழ்ந்தார்கள். நோய்கள் அவர்களை உலுப்பவில்லை. காரணம் - சமையல் பாகத்திற்கு இலுப்பெண்ணையைப் பயன்படுத்தினர்கள். அன்றைய பெண்களின் கூந்தல் குதிக்காலை தொட்டது. காரணம் இலுப்பைக் கொட்டையில் தயாரிக்கும் அரப்பை அவர்கள் முழுகுவதற்கு உபயோகித்தார்கள்,

இலுப்பைச் சருகு வயலை வளம்படுத்த பெரிதும் பயன்படுத்தினர்கள்:

**பயன்தரும் இலுப்பை நடுவோம்**
**நல்வாழ்வு பெறுவோம்:**




உங்களுடைய சகலவிதமான ஆடைகளையும் மின்வேகத்தில் சலவை செய்து பளிச்சென்ற வெண்மையைக் கொடுப்பது விஞ்ஞான ரீதியில் தயாரானது.

# மில்க்வைற் சலவைப் பவுடர்

விசேஷமாக மாணவிகியர் அணியும் வெண்ணிறச் சீருடைகளை விரைவில் அழுக்கு நீக்கித் தூய வெண்ணிறம் பொருந்தச் சுத்தம் செய்வது

மில்க்வைற் சலவைப் பவுடர்

பயன்படுத்துவோர் வசதிகருதிச் சிறிய பைக்கற்றுகளிலும் எங்கும் கிடைக்கும்

## ★ மில்க்வைற் சலவைத் தொழிலகம் ★

யாழ்ப்பாணம்.

த. பெ. இல: 77 தொலை பேசி: 23233


பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது பதிவு இல Q. J. 35 (N) 83
● 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 550, கே. கே. எஸ். வீதியில் உள்ள சிரித்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org